# இலங்கையில் முயற்சியாளர் வர்க்க எழுச்சியும் அதன் முதலாளித்துவ இணைக்கப் பான்மையும்

வி. நித்தியானந்தன்

நவீன உலகின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த பொருளாதாரப் பிரச்சினையாகிய 'குறைவிருத்தி நிலை' பற்றி ஆராய்ந்துள்ள எஸ். பி. டீ. டி. சில்வா, தமது நூலின் அறிமுகத்திற் குறைவிருத்தி நிலை என்பது '... வரையறுக்கப்பட்ட ஓர் அரசியல்-வரலாற்றுச் செய்முறையின் விளைவு' என்றும் அக்காரணத்தினால் அதனை 'மரபு ரீதியான பொருளியல், அபிவிருத்திக் கோட்பாடு என்பவற்றிற்குப் புறம்பாகப் பலதரப்பட்ட துறைகளாகிய அரசியல், பொருளியல், வரலாறு, சமூகவியல் ஆகியவற்றையும் கணிப்பிற் கொண்டே ஆராய முற்படவேண்டும்' எனவும் எடுத்துக் கூறுகின்றார்.[1] அவ்வகையில் இலங்கையின் குறைவிருத்தி நிலையை உருவாக்குவதிலும் அது நீடித்திருப்பதிலும் இச்சக்திகள் பலவும் தனித்தனியாகவும் ஒருமித்த வகையிலும் பாரிய செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றன, இன்றும் செலுத்துகின்றன. அதற்காதாரமாக இலங்கையின் அபிவிருத்தி அநுபவத்திலிருந்து அநேக எடுத்துக்காட்டுக்களைச் சுட்டிக்காட்ட முடியும். அவற்றுள் அடிப்படைத் தன்மை வாய்ந்த ஒன்றாகிய முயற்சியாளர் வர்க்க எழுச்சி பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முயற்சியாளர் வர்க்கமே நாடுகளில் இடம்பெறும் பொருளாதார மாறுபாடுகளுக்குரிய முன்னோடியாக என்றுமே திகழ்ந்து வந்துள்ளது. அரசாங்கக் கொள்கை முயற்சியாளரின் செயற்பாட்டைப் பாதிக்க வல்லதாயிருந்த போதும், பல சந்தர்ப்பங்களில், அவர்களே அரசாங்கக் கொள்கைக்குப் பொறுப்புடையவர்களாயிருந்தார்கள்; அல்லது அதன் மீது தமது செல்வாக்கைப் பிரயோகித்து அதனைத் தமது தேவைக்கேற்ப மாற்றியமைக்கக் கூடிய சக்தி பெற்றிருந்தார்கள். இலங்கை மாத்திரம் எந்த வகையிலும் அதற்கு விதி விலக்காயிருக்கவில்லை. உள்நாட்டு முயற்சியாளர் வர்க்கத்தின் தோற்றம், வளர்ச்சி, அது மேற்கொண்ட முதலீடுகள் என்ற யாவும் சுதந்திர இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்தின் தன்மையை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளாயமைந்தன.

ஒரு குடியேற்ற நாடாயிருந்து சுதந்திரம் பெற்றதென்ற வகையில், இலங்கையின் முயற்சியாளர் வர்க்கம், பொதுவாக, அது போன்ற ஏனைய நாடுகளின் வர்க்கங்களையொத்ததொன்றெனக் கூற முடிந்தாலும், அதற்கே உரித்தான சில தனித் தன்மைகளும் இலங்கை முயற்சியாளர் வர்க்கத்திற்கு இல்லாமற் போய் விடவில்லை. அவ்வாறான தனியான பண்புகள் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை மாத்திரமன்றி அதன் சமூக அமைப்பு, அரசியல் வளர்ச்சி என்பவற்றையும் பெரிதும் செல்வாக்கினுக்குட்படுத்தி நாட்டின் பிரச்சினைகளை வேறான ஒரு பாதையில் திசை திருப்பி விடுவதற்குப் பொறுப்பாயிருந்தன. இலங்கை இன்று எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளின் பட்டியலில் உச்ச நிலையில் இருக்கும் இன நெருக்கடி கூட, நுணுகிப் பார்ப்பின், ஒரு வகையில் அத்தகைய செல்வாக்கின் விளைவென்றே கூறலாம். எனினும் இன்றைய காலகட்டம் வரை நீட்டுவிக்கப்

படக்கூடிய வளர்ச்சிகள் தனியொரு ஆய்வின் கருப் பொருளாக வேண்டியவையென்பதுடன் இது போன்றதொரு கட்டுரையின் பருமனுக்கும் அப்பாற்பட்டவையாகும்.

எனவே இக்கட்டுரை முன்வைக்க விழைபவை, உண்மையில், மிக மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நோக்கினையுடையவையென்றே கூற வேண்டும். தரப்பட்ட குடியேற்றநாட்டுவாத நிலைமைகளின் கீழ் முயற்சியாளர் வர்க்கத்தின் தோற்றம், வளர்ச்சி என்பன எடுத்துக் கூறப்படுவதுடன், இலங்கை சுதந்திரமடையும் தறுவாயில் அவ்வர்க்கம் எவ்வாறு தெளிவான ஒரு தன்மையைப் பெற்றிருந்ததென்பதும் சுட்டிக் காட்டப்படுகின்றது. அவ்வாருக அது கொண்ட தெளிந்த நீரோடை போன்ற துல்லியமான தன்மை நாட்டின் பொருளாதார, சமூக அம்சங்களைப் பாதித்திருந்ததுடன் இலங்கையின் சுதந்திரத்தையே வெறும் பெயரளவிலான ஒரு நடைமுறையாக மாற்றியமைத்திருந்ததென்பதும் முன்வைக்கப்படுகின்றது. சுதந்திரத்திற்குப் பிற்பட்ட கால இலங்கையின் அரசியற் பொருளாதார மாறுபாடுகளைச் சரியான ஒரு நோக்கினிற் பொருத்திப் பார்ப்பதற்கு இக் கட்டுரை ஒரு வழிகாட்டியாக அமைய முடியுமாயின் கட்டுரை தனது குறிக்கோளைப் பூர்த்தி செய்துள்ளதெனலாம்.

## I

உலக முதலாளித்துவ அபிவிருத்திக்கும் குடியேற்றநாட்டுவாதத்திற்குமிடையே நெருக்கமான ஒரு தொடர்பு நிலவுகிறதென்பது இன்று நன்கு நிறுவப்பட்டுவிட்டதோர் எண்ணக் கருவாகும். மாக்ஸ் இது பற்றிக் கூறும்போது

> 'அமெரிக்காவில் தங்கமும் வெள்ளியும் கண்டு பிடிக்கப்பட்டமை, ... இந்தியா கைப்பற்றப்படவும் சூறையாடப்படவும் ஆரம்பித்தமை, ஆபிரிக்கா கறுப்பர்களை வணிக நோக்குடன் வேட்டையாடுவதற்குரிய ஒரு வேட்டைக் காடாக மாற்றப்பட்டமை என்ற இவை யாவும் முதலாளித்துவ உற்பத்திச் சகாப்தத்தின் விடிவைக் குறித்து நிற்பவையாகும்.'[2]

எனக் குறிப்பிட்டார். அவ்வகையிற் குடியேற்ற நாடுகள் மூலதனத் திரட்டலுக்கான தொடக்க நிலைச் சாதனங்களாகச் செயற்பட்டிருந்தன.[3] 18 ஆம் நூற்றுண்டின் இறுதிப் பகுதியளவில் உற்பத்தி முதலாளித்துவம் தோன்றுவதற்கு முன்னதாக இடம் பெற்றிருந்த வணிக முதலாளித்துவமானது (வாணிபவாதம்), உண்மையில், குடியேற்றநாட்டு முறைமையொன்றினை அடிப்படையாகக் கொண்டு அதன் மீது தங்கியிருப்பதொன்ருகவே கட்டியெழுப்பப்பட்டிருந்தது. உதாரணமாக, இங்கிலாந்தின் வாணிபவாதக் கொள்கை மேற்கிந்திய, வடக்குப்புறக் குடியேற்றங்களின் உதவியின்றி வெற்றியடைந்திருக்க முடியாது. எனினும் உற்பத்தி முதலாளித்துவத்தின் படிப்படியான தோற்றத்துடன் குடியேற்ற நாடுகளின் பங்கும் மாற்றமடைய வேண்டியதாயிற்று. அது வரை அவ்வப் பிரதேசங்களிற் சேகரிக்கப்படக் கூடிய வளங்களை மாத்திரம் மூலதனத் திரட்டலுக்கு

வழங்கிக் கொண்டிருந்த குடியேற்ற நாடுகள் இப்போது தாய் நாட்டில் உற்பத்தியாகிய பொருட்களுக்கான சந்தையாகவும் அதே நேரத்தில் தாய் நாட்டு உற்பத்திகளுக்குரிய முடியுமான முதல் விளைவு மூலப் பொருட்களை வழங்குவதற்குரிய நிரம்பல் நிலையங்களாகவும் மாற்றமடைய வேண்டியிருந்தன.[4] சுங்கப் பாதுகாப்பிலிருந்து பூரணமாக விடுவிக்கப்பட்ட கட்டற்ற வர்த்தகம் என்பது அதற்குரிய தத்துவமாக முன்வைக்கப்பட்டுச் சர்வதேசத் தொழிற் பிரிவு அதன் குறிக்கோளாக வலியுறுத்தப்பட்டது. ஆனால் அதன் மூலம், நடைமுறையில், தாய் நாட்டுக்கும் குடியேற்ற நாடுகளுக்குமிடையே சமமற்ற கொடுக்கல் வாங்கல்களுக்கு இடம் அளிக்கப்பட்டதுடன் பின்னையவற்றில் இயல்பாக ஏற்பட்டிருக்கக் கூடிய உற்பத்தி வளர்ச்சியும் தடைப்பட்டது.

ஒரு புறம், தாய் நாட்டின் தரம் கூடிய உற்பத்திகள் குவிக்கப்பட்ட விடத்துக் குடியேற்ற நாடுகளின் கைத்திறக் கைத்தொழில் உற்பத்தி அமைப்புப் படிப்படியாகத் தூர்ந்து போக, மறு புறம், புதிதாக அறிமுகப் படுத்தப்பட்ட முதல் விளைவு மூலப் பொருள் உற்பத்தி அவற்றின் இயல்பான உற்பத்திச் செய்முறையைத் திரிபு நிலைக்குட்படுத்திக் கொண்டிருந்தது. தனிப்பட்ட உற்பத்தியாளருக்கிடையிலான போட்டியை அடிப்படையாகக் கொண்ட இத்தகைய முதலாளித்துவ வளர்ச்சிச் செய்முறை வெகுவிரைவில் – 1848 அளவில் – தனியுரிமை முதலாளித்துவமாக மாற்றமடைந்த போது இந்நிலைமை மேலும் மோசமடையலாயிற்று. அதன் மூலம், லெனின் குறிப்பிடும் முதலாளித்துவத்தின் உச்சக் கட்டமாகிய ஏகாதிபத்தியவாத சகாப்தம்[5] தோற்றுவிக்கப்பட்டதுடன் ஏற்கனவே அறிமுகமாயிருந்த சர்வதேசத் தொழிற் பிரிவும் மேலும் இறுக்கமடைந்து கொண்டிருந்தது. அதாவது மேற்கத்திய வல்லரசு நாடுகள் கைத்தொழிலில் மேன்மேலும் முன்னேற்றமடைந்து கொண்டு செல்ல அவற்றின் கீழிருந்த குடியேற்ற நாடுகள் விவசாய முதல் விளைவு மூலப் பொருளுற்பத்தியிற் சிறப்பு நிலையடைந்து கொண்டிருந்தன. அதன் விளைவாக மேற்கு நாடுகளின் முதலாளித்துவத் தனியுரிமைகள் தமது தனியுரிமை லாபங்களை மேலும் அதிகப்படுத்தும் நோக்கத்துடன் வெளி நாடுகளிலும் முதலீட்டு வாய்ப்புக்களைத் தேட ஆரம்பித்திருந்தன. அவ்வாறு வெளி நாடுகள் நோக்கிச் சென்ற மூலதனம் முயற்சி சார்ந்த உற்பத்தி மூலதனமாக மாத்திரமன்றிப் பெருமளவு கடன் மூலதனமாகவும் விளங்கியமை குறிப்பிடத்தக்கது.[6] குடியேற்ற நாடுகள், இவ்வாறான முதலீட்டு வாய்ப்புக்களை இடப்படுத்தி இலகுவாக லாபம் உழைக்கக் கூடிய பாதுகாப்பான பிரதேசங்களாக விளங்கின. எனவே, குடியேற்ற நாடுகளில் ஏற்கெனவே சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்டிருந்த பொருளியல் முயற்சிகள் இப்போது பெரிதும் விஸ்தரிக்கப்படவே அந்நாடுகளிலான பழைய உற்பத்தி அமைப்பு முற்றாகவே சிதறிப் போயிற்று. அவ்விடத்திற் புதிய முதலாளித்துவத் தொடர்புகள் புகுத்தப்பட்டிருந்தன. ஆகவே புதிய முதலீடுகள் வாயிலாக மூலதனத்தை ஏற்றுமதி செய்த நாடுகளில் முதலாளித்துவ அபிவிருத்தி பெரிதும் விரைவு படுத்தப்பட்டது மாத்திரமன்றி அதனை ஏற்றுக் கொண்ட நாடுகளிலும் முதலாளித்துவ முறைமை அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. லெனின் வார்த்தைகளில்,

'எந்நாடுகளுக்கு மூலதனம் ஏற்றுமதி செய்யப்பட்டதோ அந்நாடுகளின் முதலாளித்துவ அபிவிருத்தியை இவ்வேற்றுமதி செல்வாக்கினுக்குட்படுத்துவதுடன் பெரிதும் விரைவு படுத்தவும் செய்கின்றது. ...... (அதன் வழி) முதலாளித்துவம் உலகளாவியதொன்றாக்கப்பட்டது'.[7]

இவ்வகையிற் குடியேற்றநாட்டுவாதமானது உலக முதலாளித்துவ ஊடுருவலுக்கான முக்கிய கருவிகளுள் ஒன்றாகச் செயற்பட்டிருந்தது.

ஆனால் குடியேற்ற நாடுகளில் ஏற்பட்ட முதலாளித்துவ ஊடுருவல் மேற்கத்திய நாடுகளைப் போல அந்நாடுகளின் உற்பத்திச் சக்திகளைத் தகுந்த வகையில் அபிவிருத்தி செய்வதற்கோ அல்லது அதன் அடிப்படையில் முழுமையான அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கோ காலாயிருக்கவில்லை. அதற்குப் பதிலாகக் குடியேற்ற நாடுகளின் பொருளாதாரங்கள் மூலதனத்தின் சர்வதேசத் தேவைகளுக்கேற்ப மாற்றியமைக்கப்படலாயின. அதன் விளைவாகக் குடியேற்ற நாடுகளில் இடம் பெற்றது மேற்கத்திய முதலாளித்துவ விரிவாக்கத்தின் பிரதிபலிப்பாகிய தங்கியிருக்கும் முதலாளித்துவ வளர்ச்சியேயாகும். இது அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதற்குப் பதிலாகக் குறைவிருத்தி நிலைக்கு இட்டுச் செல்கின்றதென்பதையே தங்கியிருத்தற் கோட்பாடுகள் முக்கியமாக வலியுறுத்த முன்வந்தன.[8] குறைவிருத்தி நிலையை விளக்கும் பூரணமான ஒரு கோட்பாடு என்ற வகையில் தங்கியிருத்தற் கோட்பாடு பல குறைபாடுகளைக் கொண்டதொன்றாயினும்,[9] குடியேற்ற நாடுகளில் முதலாளித்துவம் அறிமுகம் செய்யப்பட்டமையின் விளைவாக உருவாகியிருந்த நடைமுறை வளர்ச்சிகள் சிலவற்றை அது சரியாகவே எடை போட்டிருந்தது. தங்கியிருக்கும் முதலாளித்துவம் குடியேற்ற நாடுகளில் நேர்க்கணிய அல்லது எதிர்க்கணிய விளைவுகளை ஏற்படுத்தலாம். ஆனால் அவை எவ்வாறு அமைந்தாலும் அதன் வழி (அடிப்படையான தங்கியிருத்தல் நிலை காரணமாகச்) சுரண்டல், பிற்போக்கு என்பன ஏற்பட்டுக் குறைவிருத்தி நிலைக்கே ஈற்றில் இடமளிக்கப்படுகின்றது.[10] குடியேற்ற நாடுகளின் மலிந்த ஊழியம், மூல வளங்களின் மீதான தனியுரிமைக் கட்டுப்பாடு என்பன சுரண்டலுக்கும் அதன் வழி குறைவிருத்திக்குமான கருவிகளாக அமைகின்றன. மறு புறம், சிறந்த நுட்ப முறைகளின் அறிமுகமோ, அதனை அடிப்படையாகக் கொண்ட தொழில் நுட்ப முன்னேற்றம், அபிவிருத்தி என்பனவோ இந்நாடுகளில் இடம்பெறவில்லை.

ஆனால் இதன் கருத்து முதலாளித்துவத்தின் சமூக ரீதியான தொடர்புகளும் குடியேற்ற நாடுகளிற் பரவாது தடுக்கப்பட்டன என்பதல்ல. மாறாக, உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ சமுதாயத் தொடர்புகள் இந்நாடுகளிற் படிப்படியாகப் பதிய வைக்கப்பட்டன. அதன் காரணமாக, அந்நிய முதலாளிகளுக்குப் புறம்பாக, உற்பத்திச் சாதனங்களைத் தமதாக்கிக் கொண்ட, சலுகை பெற்ற வர்க்கமொன்றும் உள்நாட்டு மட்டத்தில் மெது மெதுவாக வளரத் தொடங்கியிருந்தது. இது ஏற்கெனவே இந்நாடுகளில காணப்பட்ட மானிய நிலச்சுவான்களுடன் இணைந்திருக்கக் கூடிய இடைத்தரகு பூர்ஷ்வா வர்க்கமாக விளங்கியிருந்தது. இவ்

விரு சாராருமே ஏகாதிபத்திய நலன்களுக்குப் பெருமளவு ஆதரவு நல்குபவர்களாகக் காணப்பட்டனர். ஆனால், மறு புறம், உள்நாட்டுக் கைத்தொழில் துறையொன்றை ஆதாரமாகக் கொண்ட சுதேசிய பூர்ஷ்வா வர்க்கமொன்றும் பெரும்பாலான குடியேற்ற நாடுகளில் நிலவியிருந்தது. அது ஏகாதிபத்திய நலன்களையும் அவற்றுடன் கட்டுண்டு கிடந்த நிலச்சுவான்கள் வர்க்கம், இடைத்தரகு பூர்ஷ்வா வர்க்கம் என்பனவற்றையும் எதிர்ப்பதொன்றாக விளங்கலாயிற்று.[11] 'முன்னேற்ற உணர்வுடைய தேசிய பூர்ஷ்வா வர்க்கம்',[12] என்ற கருத்து உதயமாவதற்குரிய அடிப்படையை இதுவே வழங்கியது. இந்த வர்க்கமே பெரும்பாலான குடியேற்ற நாடுகளில் முனை விட்ட சுதந்திரத்திற்கான இயக்கங்களிலும் முன்னணி வகித்தது.

முதலாளித்துவ வளர்ச்சியிற் குடியேற்ற நாடுகளின் பங்கை முன்வைக்கும் இந்தப் பொதுவான மாதிரியுருவினுள் இலங்கையின் அநுபவத்தைப் பொருத்திப் பார்ப்போமாயின் அது சில பிரதான மாறுபாடுகளைப் புலப்படுத்துவதையும், இம்மாறுபாடுகள் நாட்டின் அரசியல், பொருளாதார வளர்ச்சியைப் பெரும் செல்வாக்கினுக்குட்படுத்தியிருப்பதையும் கண்டு கொள்ள முடியும். அவற்றுள் முக்கியமானது யாதெனில், லத்தீன் அமெரிக்க நாடுகளைப் போன்றோ அல்லது இந்தியாவைப் போன்றோ உள்நாட்டு மட்டத்திற் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய முனைந்த சுதேசிய பூர்ஷ்வா வர்க்கமொன்று இலங்கையில் வளர்ச்சியடைந்திராமையாகும். உதாரணமாக, இந்தியாவை எடுத்துக் கொள்வோமாயின், மேற்கத்திய முதலாளித்துவத்தின் செல்வாக்கு இந்தியாவிற் பரவ முற்பட்ட காலத்தில், லாப உணர்வுடைய உற்பத்தி நடவடிக்கைகளில் அக்கறை கொண்டிருந்த ஒரு குழுவினர் ஏற்கெனவே அங்கு காணப்பட்டனர்.[13] வர்த்தகத்தில் இந்தியர் அடைந்திருந்த செல்வாக்கு என்பதற்குப் புறம்பாக இரும்பு உருக்கு, பருத்தி நெசவு என்பவற்றிலும் இந்திய உற்பத்தியாளர் பெருமளவில் நிறைந்திருந்தனர். அவர்கள் பிரித்தானியர் அக்கறை கொண்டிருந்த பல பொருளாதார அலுவல்களில் தாமும் நேரடியாக ஈடுபட்டிருந்த காரணத்தினாற், பல சந்தர்ப்பங்களிற், பிரித்தானியருக்குப் போட்டியாகவே இயங்க வேண்டியுமிருந்தது. உதாரணமாகத் துணி நெசவாளரும் அவர்களுடைய சில்லறை வியாபாரிகளும் பரந்த இந்தியச் சந்தையில் லங்காஷயர் துணி உற்பத்தியாளருடன் போட்டியிட வேண்டியிருந்தமை சிறப்பாகக் கவனிக்கத்தக்கது. உள்நாட்டுச் சந்தையைப் பாதுகாத்து அதனைப் பிரித்தானியரும் ஏனைய அந்நியரும் ஆக்கிரமிக்காது கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை இந்தியக் கைத்தொழில் முதலாளிகள் உணர்ந்திருந்தனர். எனவே அவர்கள் தாம் உற்பத்தி செய்த பொருட்களுக்குப் பாதுகாப்புத் தீர்வைகளை வேண்டி நின்றதுடன் இந்தியாவின் வளங்கள் வெளியே எடுத்துச் செல்லப்படுகின்றன என்ற முறைப்பாட்டினையும் தீவிரமான ஒரு கோட்பாடாக முன்வைத்தனர். அதற்கெதிராகக், குறிப்பாகத் தமது கைத்தொழில்களுக்குதவக் கூடிய சில மூலப் பொருட்கள் வெளியே எடுத்துச் செல்லப்படுவதற்கெதிராக, ஏற்றுமதித் தீர்வைகள் விதிக்கப்பட வேண்டுமெனவும் கோரி நின்றனர். இந்திய அரசாங்கத்திற்குத் தீர்வைச் சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமென 1930

களில் அவர்கள் நடாத்திய பிரசாரமும் இது விடயத்திற் குறிப்பிடத் தக்கது.[14] வர்த்தகத்தைப் பொறுத்தவரை இந்திய முதலாளிகளின் மூதாதையர் எனக் கருதப்படக் கூடிய இந்திய வர்த்தகர் 19ஆம் நூற்றுண்டின் நடுப் பகுதியளவிலேயே இந்தியாவுக்கும் பிரித்தானியாவுக்குமிடையிலான தமது வர்த்தகத்திலும் அதே போலத் தூர கிழக்கு நாடுகளுடன் தாம் நடாத்திய வர்த்தகத்திலும் பிரித்தானிய வர்த்தக நிறுவனங்களுக்குப் போட்டியாகவே இயங்க முற்பட்டிருந்தனர். அவர்களுடைய நடவடிக்கைகள் இடைத்தரகு நிலையில் இருக்கவில்லை.[15] வெகுவிரைவில் வெளிநாட்டு வர்த்தகம், கப்பற் போக்குவரத்து என்பன இந்திய முதலாளி வர்க்கத்தினர் மிகையை உழைக்கத்தக்க சாதனங்களாகச் செயற்பட ஆரம்பித்ததும் முழு முதலாளி வர்க்கமுமே அவற்றிற் கூடியளவினதான பங்கினை இந்தியாவின்பால் திருப்பி விடுவதற்கு அணி திரண்டது. பிரித்தானிய கப்பற் போக்குவரத்துத் தனியுரிமைக்கெதிரான இந்தியரின் போராட்டம் 1890 களில் ஆரம்பித்து, இடையிடையே ஏற்பட்ட தோல்விகளின் மத்தியிலும், தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருந்தது. இந்தியக் கடலோரக் கப்பற் போக்குவரத்தை இந்தியருக்கு மாத்திரம் பிரத்தியேகமாக ஒதுக்குவதற்குரிய சட்டம் ஒன்றை ஆக்குவிப்பதற்குரிய பகிரதப் பிரயத்தனமும் 1920 களிலும் 1930 களிலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.[16] இவ்விரு சாராரையும் விட இந்திய நிலச்சுவான்களும் விவசாய முதலாளிகளும் கூடத் தம்மைப் பாதிக்கக் கூடிய வகையில் மிகையாக விதிக்கப்பட்ட நில வரிகளுக்குக் கடுமையான எதிர்ப்புக் காட்டினர். அத்துடன் குடியேற்றநாட்டுவாத காலப் பொருளாதாரத் தேக்க நிலை காரணமாக நிலச்சுவான்களின் வருமானம் பாதிக்கப்பட்டதால் அவர்கள் மத்தியிற் பெருமளவான ஏற்றத்தாழ்வுகளும் உருவெடுத்திருந்தன.[17] அவர்களிற் பலர் செல்வம் மிக்க குடியான்களின் மட்டத்திற்குத் தரம் குறைக்கப்பட்டிருந்தனர். அத்தகையவர்கள் பிரித்தானியராட்சிக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததுடன், இந்தியத் தேசியவாதப் போராட்டத்தை வெகுசனப்படுத்துவதிலும் பெரும் பங்கு வகித்தனர். மேற்கத்திய கல்வி வாய்ப்புப் பெற்ற உயர் குழாமொன்றே ஈற்றில் இந்தியத் தேசியவாதத்தை நெறிப்படுத்திய போதும் அதற்கான கூடிய வலிமை இந்திய முதலாளி வர்க்கத்திடமிருந்தே கிடைக்கப் பெற்றதெனலாம். பிரித்தானிய முதலாளித்துவ நலன்களும் இந்திய முதலாளித்துவ நலன்களும் தாம் கொண்டிருந்த பொதுவான அக்கறை காரணமாக ஒன்றையொன்று எதிர்க்கத் தலைப்பட்டதால், இந்தியர் காட்டிய எதிர்ப்புணர்வு அவர்கள் வெளிப்படுத்திய தேசியவாதத்தின் மீதும் பரந்து செல்வதைத் தடுக்க முடியவில்லை. அதற்கேற்ப இந்திய சுதந்திரப் போராட்டமும் மிகத் தீவிரம் நிறைந்ததொன்றுக வளர்ந்து செல்ல முற்பட்டது.

ஆனல் இலங்கையில் இவ்வாறுக நன்கு வளர்ச்சியுற்ற முயற்சியாளர் வர்க்கமொன்று இருக்கவில்லை. லத்தின் அமெரிக்க நாடுகளைப் போன்று பெரும் நிலச்சுவான்கள் வர்க்கமொன்று கூட இலங்கையில் வளர்ச்சியடைந்திருக்கவில்லை.[18] அதற்குப் பதிலாக நாட்டின் மரபு ரீதியான சமூக அமைப்பின் வழி சில குடும்பங்கள் நில உடைமையாளராகவும், உயர் வர்க்கம் என்ற தரத்தினைப் பெற்றவையாகவும் விளங்கியிருந்தன.[19] எனினும் அக் குடும்பங்களைச் சார்ந்தோர் தம் வசமிருந்த செல்வத்தை உற்பத்தி நட

வடிக்கைகளில் முடக்கி மூலதனத் திரட்டற் செய்முறையெதிலும் பரந்த அளவில், ஈடுபடவில்லை. ஆகவே இலங்கையைப் பொறுத்தவரை சுதேசிய சனத்தொகையொன்று நிறைந்திருந்த நிலையிலும், அந்நிய முதலாளித்துவ உற்பத்தி முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட போது அவை பெருமளவுக்கு ஒரு வெறுமை நிலையில் ஆரம்பிக்கப்படக் கூடியனவாயிருந்தன. நாட்டில் ஏற் கெனவே நிலவியிருந்த உயர் வர்க்கம் ஓர் இடைத்தரகு பூர்ஷ்வா வர்க்க மாக உருவெடுக்கக் கூடிய மிக வாய்ப்பான ஒரு சூழ்நிலையாக இது காணப் பட்டது. தேசியவாத நடவடிக்கைகள் கூட இந்த வர்க்கத்திடமிருந்தன்றி வேறு வகையில் ஊற்றெடுக்க முடியவில்லை.

## II

மேற்கூறியவாறான நிலைமைகளின் கீழ் 1833 ஆம் ஆண்டு கோல்புறூக் சீர்திருத்தங்களின் வழி இலங்கை முதலாளித்துவ உற்பத்தி அலுவல்களுக் கெனத் திறந்து விடப்பட்டு மேற்கத்திய கைத்தொழிற் சமூகத்துக்கு வேண்டிய முதல் விளைவுப் பண்டங்களை உற்பத்தி செய்வதிற் பிரித்தானிய முதலீட்டாளர் ஈடுபட முன்வந்த போது அவர்களுக்கு உள்நாட்டு மட்டத்திலிருந்து எவ்வகையான போட்டியும் கிளம்பவில்லை. கைத்தொழிற் பொருட்களெதுவும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படாதது மாத்திர மன்றி முதல் விளைவு உற்பத்தித் துறையில் உருவாகியிருந்த முதலீட்டு வாய்ப்புக்களைக் கூட உடனடியாகப் பயன்படுத்துவதற்கு இலங்கையர் தயாராயிருக்கவில்லை.

பிரித்தானிய முதலீட்டாளர் முதன்முதலாகப் பயிர் செய்வதற்குத் தேர்ந்தெடுத்த கோப்பி இலங்கையருக்கு எவ்வகையிலும் புதிய ஒரு பயிரா யிருக்கவில்லை. சிறு பயிர் மட்டத்தில் ஏற்கெனவே உற்பத்தி செய்யப்பட்ட அது 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே வருடமொன்றிற்குச் சராசரி 1000 அந்தர் வரை ஏற்றுமதி செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. 1820 களில் இந்த அளவு 10,000 அந்தருக்கு மேற்பட்ட ஒரு தொகையைத் தொட்டிருந்தது.[20] ஆனால் வர்த்தக நோக்கினில் திளைத்த அரசொன் றின் தனியுரிமைக் கட்டுப்பாடுகளின் கீழ்க் கோப்பிச் செய்கை மேற் கொண்டு விரிவடையத்தக்க எதுவித தூண்டுதலும் வழங்கப்படவில்லை.[21] அத்தகைய கட்டுப்பாடுகள் யாவும் 1833 இல் நீக்கப்பட்டதும் சிறு பயிர்க் கோப்பி உற்பத்தியாளர் முன்னேறக் கூடிய வாய்ப்பு ஏற்பட்ட போதும், பெருமளவு மூலதனத்துடன் தோட்ட அடிப்படையிற் கோப்பியைப் பயிர் செய்ய முன்வந்த பிரித்தானிய முதலீட்டாளரின் போட்டியை அவர்களால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. தமது உற்பத்தியைத் தோட்ட அடிப்படை யில் மாற்றிக் கொள்ளக் கூடிய வசதிகளெதுவும் சிறு பயிர் மட்ட உற் பத்தியாளருக்கிருக்கவில்லை. எனவே அவர்களுடைய செய்கை நலிவடையப் பெருந்தோட்டக் கோப்பி, கோப்பி ஏற்றுமதியை ஆக்கிரமித்துக் கொண் டது. எனவே பயிர் பரிச்சயப்பட்டதொன்றாயிருந்த போதும் அதனை முதலாளித்துவ ரீதியிற் பயிர் செய்யக் கூடிய புற வசதிகளெதுவும் இலங்கையருக்கில்லாதிருந்த காரணத்தினாற் பிரித்தானியரின் முதலாளித் வது உற்பத்தி நடவடிக்கைகளுக்கு உள்நாட்டு மட்டத்திற் போட்டியெது

வும் உருவாகவில்லை. அதனாற் கோல்புறூக் சீர்திருத்தங்கள் அமுல் செய்யப்பட்டு ஏறக்குறைய அரை நூற்றாண்டுக் காலம் சென்ற பின்பு கூட – 1880 – 81 அளவில் – இலங்கையின் பிரதான உற்பத்தி நடவடிக்கையாகக் கோப்பி உற்பத்தியே நீடித்திருந்தது மாத்திரமன்றி அதன் செய்கையின் கீழான நிலப் பரப்பிலும் 90 சத வீதத்திற்கு மேற்பட்டவை ஐரோப்பியருக்குச் சொந்தமானவையாகவே விளங்கியிருந்தன.[22] மிகுதியான 10 சத வீத பரப்பிலும், அதன் பெரும் பகுதி, இலங்கையரல்லாத இந்திய நலன்களின் கைகளிலேயே முடங்கிக் கிடந்தது.[23]

முதலாளித்துவ உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடிய தகைமை பெற்ற வர்க்கமொன்று உள் நாட்டில் இல்லாதிருந்த நிலையிற் பிரித்தானிய பொருளாதார அலுவல்களுக்குப் போட்டி ஏற்படாமை ஒரு புறமிருக்க, மறு புறம், பிரித்தானிய முயற்சிகள் தான் இலங்கையிலான முதலாளித்துவ உற்பத்திச் செயற்பாட்டின் ஒரு முன்னோடியாக இயங்க முடிந்தன. அவ் வகையிற் பிரித்தானியரின் பெருந்தோட்டச் செய்கை, உண்மையில், உள் நாட்டவரின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கான ஒரு தூண்டுதலாகவும், வழி காட்டியாகவும் விளங்க முற்பட்டிருந்தது. உற்பத்தி அலுவல்களுக்காகப் பொருளாதாரத்தைத் திறந்து விடும் ஒரு செய்முறையைப் பிரித்தானியர் தொடக்கி வைத்ததும், அதன் மூலம் உருவாகிய சந்தர்ப்பங்களைத் தகுந்த வகையிற் பயன்படுத்திக் கொள்வதில் இலங்கையர் ஒருபோதும் பின்னிற்க வில்லை. அத்தகையவர்களில் நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட மரபு ரீதியான உயர் வர்க்கத்தினர் முன்னணி வகித்தனர்.[24] அவர்கள் மாத்திரமன்றி அவர்களுக்குப் புறம்பாகவும் பல தனிப்பட்டவர் புதிதாக ஏற்பட்ட முதலீட்டு வாய்ப்புக்களைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள முன் வந்தனர்.

எனினும், அவ்வாறாக இலங்கையர் பலரும் ஈடுபட்ட முதலீட்டு நடவடிக்கைகளின் முக்கிய தன்மையென்னவெனில் அவை இந்தியாவைப் போன்று பிரித்தானியருக்குப் போட்டியான முறையிலன்றி அவர்களுடைய செயற்பாடுகளுக்குச் சார்பாக அமைந்திருந்தமையேயாகும். அவ்வகையில் உள்நாட்டவரின் நடவடிக்கைகள் பிரித்தானிய நலன்களுடன் முரண்படுவதாக அல்லாமற் பெருமளவுக்கு ஒத்துப் போவனவாகவே நிலை பெறலாயின. அந்நிய முதலாளி வர்க்கத்தினருக்கு இணக்கமுடைய ஒரு கூட்டத்தினராகவே உள்நாட்டு முயற்சியாளர் வளர்ந்து செல்லத் தலைப்பட்டிருந்தனர். இந்த இணக்கச் செய்முறையை விரிவு படுத்துவதே கட்டுரையின் இப்பகுதி கொண்டுள்ள பிரதான நோக்கமாகும்.

இலங்கை முயற்சியாளர் லாப நோக்கம் கருதி மேற்கொண்ட பொருளாதார அலுவல்களை முக்கியமாக இரு மட்டங்களில் அடையாளம் கண்டு கொள்ள முடியும்:

(1) அந்நிய முதலீட்டாளரின் முதலீட்டு முயற்சிகளுக்கு ஆதாரமாக இயங்கக்கூடிய பலதரப்பட்ட சேவைத் தொழில்களில் அவர்கள் கொண்ட அக்கறை.

(2) அந்நியரின் முதலீட்டு முயற்சிகளில் நேரடியாக அவர்கள் கொண்ட ஈடுபாடு.

இவையிரண்டில் முதலாவது செய்முறை பிரித்தானியராட்சிக்கு முன்பே, உண்மையில், ஆரம்பித்து விட்டிருந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்பு இலங்கையர் ஈடுபட்ட சேவைத் தொழில்களில் முக்கியமானவை வெளிநாட்டவருக்கு உணவுப் பண்டங்களையும் ஏனைய நுகர்வுப் பொருட்களையும் வழங்கல், கட்டடத் தளபாடங்களை வழங்கல், சாராயக் கைத்தொழில் போன்றனவாகும். இவற்றின் வழி கரையோர மாகாணங்களிலிருந்த இலங்கையர் சிறிது சிறிதாக மூலதனத்தைத் திரட்டிக் கொண்டிருந்தனர். பிரித்தானியர் வருகையுடன் இத்தகைய சேவைத் தொழில்களை மேலும் விரிவுபடுத்திக் கொள்ளக் கூடிய வாய்ப்புத் தோன்றியிருந்தது. அவர்களாட்சிக் காலத்திற் படிப்படியாகப் பெருந்தோட்ட விவசாய வளர்ச்சி ஏற்பட்டதும் அதனுடன் இணைந்த வகையில் அபிவிருத்தியடைந்த பணக் கொடுக்கல் வாங்கல்களின் பெருக்கம் அவற்றை மேலும் ஊக்குவிப்பதற்குக் காலாயிற்று.[25] அவை மாத்திரமன்றிப் பெருந்தோட்டங்களின் ஆரம்பத்துடன் வேறு பல புதிய சேவைகளுக்கும் தேவை ஏற்பட்டிருந்தது. காடுகளை அழித்தல், ஊழிய நிரம்பல், போக்குவரத்து, கட்டட நிர்மாணம் போன்றவற்றிலான கொந்தராத்துக்களும் கோப்பியிலான வர்த்தகமும் இவற்றிற் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இவை மூலதனத் திரட்டலுக்குரிய பாரிய மார்க்கங்களாகச் செயற்படலாயின. உதாரணமாகப் போக்குவரத்துத் துறையில், 1860 களின் நடுப்பகுதியளவில் — கொழும்பு – கண்டி புகையிரத வீதி பூர்த்தி செய்யப்படுவதற்குச் சற்று முன்னதாக — கொழும்புக்கும் கண்டிக்குமிடையிலான பாதையில் மாதாந்தம் 8,000 முதல் 15,000 மாட்டு வண்டிகள் வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டனவென்பது போக்குவரத்துக் கொந்தராத்து மூலம் ஒருவர் உழைத்துக் கொள்ள முடிந்த லாப அளவினை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.[26] இவ்வாருகப் பெருந்தோட்டத் துறையுடன் நேரடியாகத் தொடர்பு படும் பிரதான மட்ட சேவைகளைவிட, இரண்டாந்தர மட்டத்தில், மறைமுகமாகவும் பல சேவைகள் வளர்ச்சியடையக் கூடியதாயிருந்தன. கொள் கலன், வீட்டுத்தளபாடங்கள், புகையிரதப் பாதைக்கான சிலிப்பர் கட்டைகள், தந்திக் கம்பங்கள் என்ற இது போன்றவற்றின் உற்பத்தியும், இலகு சேவைகள் எனக் கொள்ளத்தக்க, மக்கள் நடமாட்டம் கூடிய பகுதிகளில், பலதரப்பட்ட தேவைகளுக்கும் வேண்டிய கடைகளையும், ஹோட்டல்களையும் திறத்தல் என்பனவும் இவற்றிற் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

மேற்கூறிய வகையிலான முதலீடுகளின் பிரதான அம்சம் யாதெனில் இவை யாவும் பிரித்தானியர் லாபமுழைக்கக் கூடிய செய்முறையைப் பெரிதும் சுலபப்படுத்தியிருந்தமையாகும். அவர்கள் தமது முழுமுதல் அக்கறையையும் பெருந்தோட்டச் செய்கை மீது செலுத்த, அதனுடன் தொடர்புடைய வகையில் முன்னும் பின்னும் ஏற்பட்ட இணைப்பு நடவடிக்கைகள் பலவற்றையும் இலங்கையர் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தனர். பிரித்தானியரின் பெருந்தோட்ட முதலீடுகள் வேகமாக அதிகரித்துச் சென்றமைக்கும், அதனையும் விட முக்கியமாகக் கோப்பியின் முறிவைத் தொடர்ந்து ஏனைய பயிர்களை நோக்கிக், குறிப்பாகத் தேயிலை உற்பத்தி நோக்கித், தமது முதலீடுகளை அவர்கள் இலகுவாகத் திருப்பிக் கொள்ள முடிந்தமைக்கும் உள்நாட்டவர் ஆதார நிலையில் வழங்க முன்

வந்த இத்தகைய சேவைகளே பெருமளவுக்குக் காரணமாயிருந்தன. இவ்வகையிற் பிரித்தானியரும் இலங்கையரும் ஒருவருக்கொருவர் போட்டியாளராயன்றி ஒருவரில் ஒருவர் தங்கியிருப்போராகவே வளர்ந்து சென்றமை கவனிக்கத்தக்கது. பிரித்தானியரின் பெருந்தோட்டச் செய்கையின்றி இலங்கையரோ அல்லது இலங்கையரின் ஆதார சேவைகளின்றிப் பிரித்தானியரோ லாபத்தினை உழைத்துக் கொள்ள முடியவில்லை. இந்நிலையில் இலங்கையில் இடம் பெற்ற மூலதன திரட்டற் செய்முறையும், அதனுடன் இணைந்த வகையில் ஏற்பட்ட முதலாளித்துவ வளர்ச்சியும் பிரித்தானிய நடவடிக்கைகளையும் அதன் வழி பிரித்தானியரையும் பெரிதும் சார்ந்திருந்தமை ஆச்சரியத்திற்குரியதொன்றல்ல.

இரண்டாவது நிலையில், ஆங்கிலேயரின் செயல் விளக்க விளைவினுல் உந்தப்பட்டு இலங்கையர் தாமும் அவர்களைப் போலவே பெருந்தோட்டச் செய்கையில் ஈடுபட முன்வந்தனர். இவ்வாருகப் பெருந்தோட்டத் துறையில் இலங்கையர் இறங்குவதற்கு வேண்டியளவான மூலதனம் நாம் மேலே குறிப்பிட்ட ஆதார சேவைகளின் வழியாகவே பெருமளவுக்குத் திரட்டப்பட்டிருந்தது. பெருந்தோட்டங்கள் உள்நாட்டவரின் மூலதனத்தைக் கவரக்கூடிய மேலதிக மார்க்கங்களாகவே செயற்பட்டன. அவை முதல் நிலையில் அவர்கள் மேற்கொண்ட ஆதார ரீதியான நடவடிக்கைகளைப் போன்றன்றிப் பிரித்தானியருக்குப் போட்டியாக மாறி விடக் கூடிய வாய்ப்பிருந்த போதும், மெய் நிலையில், முதலீடுகள் சென்ற திசை, அவற்றின் அளவு என்பவற்றைக் கொண்டு நோக்குமிடத்து அவை அவ்வாறு போட்டியாக அமைவது தவிர்க்கப்பட்டமையைக் கண்டுகொள்ள முடியும்.

பெருந்தோட்டங்களிலான சுதேசிய முதலீடுகள் கோப்பிச் சகாப்தத்திலேயே ஆரம்பித்த போதும் கோப்பியிலான ஐரோப்பிய முதலீடுகளுடன் ஒப்பிடுமிடத்து இலங்கையர் இத்துறையில் மேற்கொண்டவை மிகச் சொற்பமாகவே காணப்பட்டன. உதாரணமாக, 1880 அளவிற், பெருந்தோட்ட முறையிலமைந்த கோப்பிப் பரப்பின் ஏறக்குறைய 13,500 ஏக்கர் இலங்கையரின் கைகளில் இருந்ததாக மதிப்பிடப்பட்டது.[27] எனினும் இது பெருந்தோட்டக் கோப்பியின் கீழான மொத்த நிலப்பரப்பின் 7 சத வீதத்திற்குக் குறைந்த ஓர் அளவே என்பது கருத்திற் கொள்ளத்தக்கது. ஆகவே இத்தகைய குறைந்த அளவுடன் அவர்களுடைய முதலீடுகள் பிரித்தானிய நலனை எந்த வகையிலும் அச்சுறுத்த முடியவில்லை. கோப்பிச் செய்கையில் அவர்கள் தகுந்தளவு முன்னேறுவதற்கு முன்னதாக அது இலங்கையின் பொருளாதார அரங்கிலிருந்து முற்ருகவே மறைந்துவிட்டது.

கோப்பியைத் தொடர்ந்து வளர்ச்சியடைந்த பிரதான பயிராகிய தேயிலையில் இலங்கையர் ஆரம்பத்திலிருந்தே குறைந்தளவுக்குத் தான் கவனம் செலுத்தி வந்தனர். 20 ஆம் நூற்றுண்டின் ஆரம்பமளவிற்தான் அவர்களுடைய கவனம் ஓரளவுக்காவது தேயிலை நோக்கித் திருப்பியதெனலாம். எனினும் தேயிலைச் செய்கை நன்கு உறுதி பெற்றிருந்த 1917ஆம் ஆண்டளவிற் கூட 650 ஏக்கருக்கு மேற்பட்ட பரப்புடைய தோட்டங்களின் உடைமையாளராக விளங்கிய ஆறு பேர் உட்பட, ஏறக்குறைய 29

இலங்கையர் மாத்திரமே 300 ஏக்கருக்கு மேலான விஸ்தீரணமுடைய தேயிலை நிலங்களை வைத்திருந்தனர்.[28] அதே நேரத்தில் தேயிலையின் கிழான மொத்தப் பரப்பு 500,000 ஏக்கருக்கு மேற்பட்டதொன்றாகக் காணப்பட்டது.[29] ஆகவே கோப்பியைப் போன்றே தேயிலையிலும் பிரித்தானிய முதலீட்டாளர் பெரிதுபடுத்துமளவிற்குச் சுதேசிய முதலீடுகள் வளரவில்லை என்பது புலனாகும். மொத்தத் தேயிலைப் பரப்பின் ஏறக்குறைய 2 சத வீதம் வரைதான் இலங்கையருக்குச் சொந்தமான தோட்டங்களாகக் காணப்பட்டது. அது மாத்திரமன்றி, உள் நாட்டவர் ஆரம்பித்த தேயிலைத் தோட்டங்களிற் பெரும்பாலானவை நடு மட்ட, கீழ் மட்டத் தேயிலை ரகங்கள் உற்பத்தியாகிய களனிப் பள்ளத்தாக்கு, தென்மாகாணம் போன்ற பிரதேசங்களிலேயே இடப்படுத்தப்பட்டிருந்தன. எனவே உயர் ரகத் தேயிலையை உற்பத்தி செய்து கொண்டிருந்த ஆங்கிலேயரின் மத்திய, ஊவா மாகாணங்களில் அமைந்திருந்த தோட்டங்களுடன் அவை சமமான முறையிற் போட்டியிடவும் முடியவில்லை.

உள்நாட்டவரின் பெருந்தோட்ட முதலீடுகளைப் பாரிய அளவிற் கவர்ந்து கொண்ட துறையாகத் தெங்குச் செய்கையே விளங்கியது. 1935 ஆம் ஆண்டளவில், இலங்கையிலிருந்த தெங்கு நிலங்களின் ஏறக்குறைய 90 சத வீதம் சுதேசிகளுக்கே சொந்தமாயிருந்ததென்பது,[30] தெங்குச் செய்கையில் உள்நாட்டவர் கொண்டிருந்த அசைக்க முடியாத பிடியை எடுத்துக் காட்டும். அதற்குப் பல காரணங்கள் பொறுப்பாயிருந்தன. ஆரம்பத்திலிருந்தே தெங்குப் பொருட்களுக்குக் கிடைத்து வந்த நல்ல விலை; ஏனைய பெருந்தோட்ட முதலீடுகளுடன் ஒப்பிடுமிடத்து அதற்கு வேண்டியிருந்த குறைந்த அளவிலான மூலதனமும் அது ஒரே முறையிலன்றிச் சிறிய அளவுகளிற் பரந்த ஒரு காலப் பகுதியில் (10 முதல் 12 ஆண்டுகள் வரை) முடக்கப்படக் கூடியதாயிருந்தமையும்; தேயிலை, கோப்பி போன்றவற்றை விட மிகக் குறைந்தளவு கவனத்தின் மத்தியிலும் அது பலன் கொடுக்கக்கூடியதாயிருந்தமை; குறைந்த மட்டப் பதப்படுத்தல் தேவை என்பன இவற்றிற் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.[31] எவ்வாறாயினும், இலங்கையரின் நாளாந்த வாழ்க்கையுடன் இணைந்த ஒரு பயிரில் அவர்கள் பிரசித்தி பெற்றமை அதிகளவு ஆச்சரியத்திற்குரியதொன்றெனவும் கூற முடியாது. ஆகவே பல வகையிலும் சுதேசிகளுக்கு வாய்ப்பான இத்தகைய ஒரு பயிர் மீது தாம் கவனம் செலுத்துவதினின்றும் பிரித்தானியர் புத்திசாலித்தனமான முறையில் விலகிக் கொண்டிருந்தனர். ஆனால் அதற்கு மேலாக, ஒரு பருநிலை மட்டத்திற் பெருந்தோட்ட முதலீடுகளை ஒன்றாக எடுத்து நோக்குமிடத்து, தெங்கு உற்பத்தியினூடாக இலங்கையர் வேகமாக முன்னேறியிருந்த போதும் கூட, அதையிட்டு மேற்கத்திய முதலீட்டாளர் தம்மை அதிகம் அலட்டிக் கொள்ள வேண்டியதாகவும் இருக்கவில்லை. அதற்கு உள்நாட்டவரின் முதலீடுகள் வளர்ந்து சென்ற தன்மையே காரணமாயிருந்தது. தேயிலையைப் பொறுத்தவரை நன்கு பிரசித்தியடைந்திருந்ததும், றப்பர்ச் செய்கையில் தகுந்தளவு பரவியிருந்ததுமான கூட்டுப் பங்கு நிறுவனங்கள் தெங்கு உற்பத்தியில் வெகு குறைவாகவே காணப்பட்டன. கூட்டுப் பங்கு நிறுவன முறை நன்கு நிலை பெற்று விட்ட 1950 அளவிற் கூட ஏறக்குறைய 85 சத வீதமான தெங்கு நிலங்கள் (உள்நாட்டுத்) தனியார் முகாமையின் கீழிருக்க ஏறக்குறையப்

10 சத வீதமானவையே ஏதாவது நிறுவன முறையின் கீழ் முகாமை செய்யப்பட்டன.[32] அதற்குக் கூட்டுப் பங்கு நிறுவன முறையின் நன்மைகளை இலங்கையர் இக்கட்டத்திற் சரியானபடி புரிந்து கொள்ளாமை ஒரு காரணமெனக் கூற முடிந்தாலும்,[33] நில உடைமை சமூக அந்தஸ்திற்குரிய ஓர் அளவு கோலாக இருந்தமையும், அதன் விளைவாக வேறு வகை முகாமையின் கீழ் லாப அளவுகளை அதிகரித்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பிருந்தாலும் அதனை விட்டுக் கொடுத்துத் தனி உடைமையின் கீழ்த் தமது சமூக உயர்வினைப் பேணிக் கொள்ள அவர்கள் தயாராயிருந்தமையும் முக்கியமாகச் சுட்டப்பட வேண்டும். இது, இலங்கை வங்கி முறை ஆணைக்குழு எடுத்துக் காட்டுவது போல, 'குறைவிருத்தி நிலையிலுள்ள கைத்தொழில், வணிக ஒழுங்கு முறையொன்றின் அறிகுறியாகவே' கொள்ளப்பட வேண்டும்.[34] எனினும் தனியார் உடைமையை இலங்கையர் விரும்பி ஏற்றுக் கொண்டமை பிரித்தானியப் பெருந்தோட்ட முதலீட்டாளரைப் பொறுத்தவரை பெரிதும் வாய்ப்புடையதாயிற்று. ஏனெனில் உள்நாட்டவர் தமக்குகந்த ஒரு பயிர் மீது முதலிட முன்வந்த போதும் கூட அவர்கள் தகுந்த முகாமை முறையைத் தேர்ந்தெடுக்காத காரணத்தினால் வெளிநாட்டு முதலாளிகள் உழைத்துக் கொண்ட அதே அளவான லாபத்தை உழைத்துக் கொள்வதோ அல்லது அவர்களுடைய தரத்தை எட்டிப் பிடிப்பதோ முடியாது போயிற்று. அந்தளவுக்கு இலங்கையர் பிரித்தானியருடன் சரி சமமாகப் போட்டியிடவும் முடியவில்லை.

இலங்கையின் இன்னொரு பிரதான ஏற்றுமதிப் பயிராகிய றப்பரில் லாபம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பளவில் தான் உதயமாகின்றன. இந்நிலையிற் பிரித்தானியர் அதன் செய்கையில் அக்கறை செலுத்த முற்பட்ட போது இலங்கையருடைய கவனமும் ஏக காலத்தில் அதன் மீது திரும்புகின்றது. இக்கட்டமளவில் இலங்கையர் பெருந்தோட்டச் செய்கையிற் போதிய அநுபவம் பெற்றிருந்ததுடன், ஏற்கனவே நாம் நோக்கிய, ஆதார சேவைகளினூடாகவும், தெங்குச் செய்கையில் உழைத்துக் கொண்ட லாபத்தின் வழியாகவும் கணிசமானளவு மூலதனத்தையும் திரட்டிக் கொண்டிருந்தனர். ஆகவே இலங்கையரும் பிரித்தானியரும் இது வரை தவிர்த்துக் கொண்ட போட்டி இப்போது றப்பரின் மூலம் ஏற்படுவதற்குரிய தகுந்த சூழ்நிலையொன்று உருவாகியிருந்தது. ஆனால் இங்கு கூட, ஈற்றில், அது கைகூடவில்லை. ஆரம்பத்திலிருந்தே பிரித்தானியரை விட இலங்கையரின் செல்வாக்கு றப்பர்க் கைத்தொழிலில் அதிகமாயிருந்ததுடன், படிப்படியாக அது பின்னையவரின் ஆக்கிரமிப்புக்குட்பட்ட ஒரு துறையாகவே வளர்ச்சியடையலாயிற்று. அவ்வகையில் அது தேயிலை, கோப்பி என்பவற்றை விடத் தெங்குச் செய்கையைக் கூடியளவு அண்மிப்பதொன்றாயிருந்தது.

றப்பர், தென்னையைப் போல, உள்நாட்டவரின் நாளாந்த வாழ்க்கையுடன் இணைந்த ஒரு பயிராக இல்லாமலிருந்த போதும் அது அவர்கள் வசமானமைக்குச் சில குறிப்பான காரணங்களிருந்தன. அவற்றுள் முதன்மையாகக் குறிக்கப்பட வேண்டியது றப்பர் உற்பத்தியாளர் எதிர் நோக்கிய நிலப் பற்றாக்குறையாகும். கோப்பியின் முறிவைத் தொடர்ந்து தேயிலை, தெங்கு என்பன நன்கு முன்னேறிய ஒரு நிலையிலேயே றப்பர்

அறிமுகமாகிய காரணத்தினுல் அதன் செய்கைக்குட்படுத்தப்படக் கூடிய கன்னி நிலங்கள் வெகு குறைவாகவே இருந்தன. அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழான முடிக்குரிய காணிகள் இன்னமும் ஓரளவு காணப்பட்ட போதும் கோப்பி, தேயிலைக் காலங்களைப் போல அரசாங்கம் அவற்றை இலகுவில் விட்டுக் கொடுப்பதற்குத் தயாராயில்லாமலிருந்ததுடன் நிலம் பெறும் விடயத்திற் பிரித்தானிய முதலீட்டாளருக்கு வேறு வகையில் உதவி செய்வதற்கும் பெரிதும் தயக்கம் காட்டியது. றப்பர்ச் செய்கைக்குகந்த பிரதேசங்களில் வேண்டியளவு நிலங்களை விடுவிப்பதற்கு அரசாங்கம் வசதி செய்யவில்லை என்ற ஆங்கில முதலாளிமாரின் குற்றச்சாட்டின் மத்தியிலும் உத்தேச நோக்கங்களுக்கு நிலத்தைப் பெற்றுக் கொடுப்பதில்லை என்ற தனது கொள்கையில் அரசாங்கம் உறுதியாயிருந்தது.[35] இந்நிலையில் ஏனைய பயிர்களின் கீழிருந்த நிலங்களை றப்பர் நோக்கித் திருப்பி விடுவதன் மூலமன்றி வேறு வகையில் நிலத்தைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. பிரித்தானிய முதலாளிமாரைப் பொறுத்தவரை அவ்வாறு திருப்பி விடக்கூடிய நிலங்கள் பெரும்பாலும் தேயிலைச் செய்கைக்குட்பட்டவையாகவே இருந்தன. ஆனுல் தேயிலை தகுந்த லாபம் உழைத்துக் கொண்டிருந்த நிலையில் அதனை அழித்து றப்பர் பயிரிடுவதில் அவர்கள் ஆர்வம் காட்டவில்லை. அவர்களுடைய முழு முதல் அக்கறை தேயிலையின் மீதே நிலைத்திருந்தது. அதே நேரத்தில் றப்பரில் லாபம் உழைக்கக் கூடிய வாய்ப்பினையும் முற்றுக விட்டுக் கொடுக்க அவர்கள் தயாராயிருக்கவில்லை. அதன் காரணமாகவே தேயிலைச் செடிகளிடையே றப்பரைப் பயிரிடுகின்ற வழக்கமும் அதன் வழி தேயிலை – றப்பர்த் தோட்டங்கள் என்ற பெயரில் முதல் விளைவு உற்பத்தியிலும் கலப்புத்தோட்டங்கள் உருவாவதும் சாத்தியமாயிற்று. எனினும், றப்பர் உற்பத்தியிலான புதிய ஆங்கில முதலீடுகள் இலங்கைக்குப் புறம்பாகப் பெரும்பாலும் மலேயாவை நோக்கியே சென்றமையும் சுட்டிக் காட்டப்பட வேண்டும். இலங்கையில் 1920 அளவிற் கூட ஐரோப்பியருக்குச் சொந்தமான றப்பர் நிலங்கள் 161,000 ஏக்கர் வரை மாத்திரமே காணப்பட,[36] மலேயாவில் 1914 ஆம் ஆண்டளவிலேயே 23·96 மில்லியன் பவுண் முதலீடு செய்யப்பட்டு 808,224 ஏக்கர் நிலத்தை உள்ளடக்கிய 234 றப்பர்த் தோட்டங்கள் திறக்கப்பட்டிருந்தன.[37]

மறு புறம், நிலத்தைப் பெறுவதில் ஆங்கிலேயர் எதிர்நோக்கிய அதே அளவான நெருக்கடிகளை இலங்கையில் உள்நாட்டவரும் சந்தித்த போதும், ஏனைய பயிர்களின் கீழிருந்து நிலங்களை றப்பர் நோக்கி மாற்றி விடுவதற்குப் பின்னைய சாரார் கூடியளவு விருப்புடையவராயிருந்தனர். உள்நாட்டவர் வசமிருந்த நிலங்கள், பிரித்தானிய முதலீட்டாளரைப் போல, அதிகளவான லாபத்தை ஈந்து கொண்டிருந்த தேயிலையின் கீழ் மாத்திரம் முடங்கிக் கிடக்கவில்லை. லாபம் தரக் கூடிய நிலங்கள் ஓரளவுக்குத் தேயிலைச் செய்கையிலும் தெங்கு உற்பத்தியிலும் பயன்படுத்தப்பட்டனவென்றல், அவற்றிற்குப் புறம்பாகக், கணிசமானளவு நிலங்கள் நெற்செய்கைக்கும் உட்படுத்தப்பட்டிருந்தன.[38] இந்நிலங்களில் ஏக்கருக்கான விளைச்சல் மிகக் குறைவாயிருந்ததுடன், முன்னேற்றமான முறைகளைக் கையாள்வதற்குரிய தூண்டுதல்களும் எதுவும் காணப்படவில்லை. ஆகவே அத்தகைய நிலங்களை றப்பர் விலைகள் வேகமாக உயர்வடைந்து கொண்டிருந்த ஒரு நிலையில், அதன் செய்கை நோக்கித் திருப்பி விடுவதில் எது

வித தடையும் இருக்கவில்லை. நெல் பயிரிடப்பட்ட தாழ் நிலப்பரப்புக்கள் பல றப்பர் வளர்ப்புக்குகந்தவையாயிருந்தமை இம்மாற்றத்தினை மேலும் ஊக்குவிப்பதாயிருந்தது. அதனுல் உள்நாட்டவர் றப்பரில் மேற்கொண்ட முதலீடுகளுக்கான நிலங்கள் ஏராளவுக்குச் சுலபமாகவே கிடைக்க முடிந் தன. நிலத்தின் மீதான கட்டுப்பாட்டை விட றப்பர்ச் செய்கை உச்சக் கட்டத்தினை அடைந்து கொண்டிருந்த ஒரு நிலையில் 1914 ஆம் ஆண்டு, முதலாவது உலக மகா யுத்தம் குறுக்கிட்டமை காரணமாகவும் பிரித் தானியருடைய அக்கறை பலவீனப்படுத்தப்பட்டது. றப்பர், யுத்த தேவை களுக்கான ஒரு முக்கிய மூலப் பொருளாயிருந்த போதும், பிரித்தானியரின் மனித சக்தி, நிதி என்பவற்றின் மீது யுத்தம் ஏற்படுத்திய மிகுந்த தாக் கத்தின் காரணமாக, யுத்த காலத்தில் றப்பர் நோக்கிப் புதிய முதலீடு களைத் திருப்பி விடுவது மிகவும் பலவீனமடைந்தது.[39] இந்த இடையீட்டை இலங்கையர் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடியதா யிருந்தது. அது மாத்திரமன்றி, றப்பரும் தென்னையைப் போன்று ஒரு மரப் பயிராக இருந்த காரணத்தினுல், தெங்கு உற்பத்தியில் சுதேசிகள் அநுபவித்ததாக நாம் குறிப்பிட்ட சாதக நிலைகள் பல, றப்பருக்கும் பொருந்துவனவாகக் காணப்பட்டன. ஆகவே எல்லா வகைகளிலும் றப்பர்ச் செய்கைக்கான நிபந்தனைகள் பிரித்தானியரை விட இலங்கை யருக்கு வாய்ப்புடையவையாக விளங்கியமையால் அதனைத் தாம் கட்டுப் படுத்திக் கொள்வது பின்னையவருக்கு இலகுவாயிற்று. 1934 ஆம் ஆண் டளவில் இலங்கையிலிருந்த றப்பர்ப் பரப்பின் ஏறக்குறைய 77 சத வீதம் ஸ்ரேளிங் நிறுவனங்களல்லாதவற்றுக்குச் சொந்தமானதாக மதிப்பிடப் பட்டிருந்தது.[40] எனினும் இது உள்ளூர் மூலதனத்தை மாத்திரமன்றி அந்நிய மூலதனத்தையும் தம் வசம் வைத்திருந்த ரூபாய்க் கம்பெனிகளை யும் உள்ளடக்கிய காரணத்தினுல் அதற்கு இடம் கொடுத்துப் பார்க்கு மிடத்து அண்ணளவாக 55 சத வீத றப்பர் நிலங்கள் இலங்கையருடைய கட்டுப்பாட்டின் கீழிருந்தன எனலாம்.[41] இது, ஓர் உள்ளார்ந்த நிலையில் பிரித்தானியருக்கும் இலங்கையருக்கும் போட்டியை ஏற்படுத்தக் கூடிய தொன்முகக் காணப்பட்ட போதும், நாம் ஏற்கனவே நோக்கியபடி, றப்பர்ச் செய்கையிலான பிரித்தானிய முதலீடுகள் இலங்கையை விட மலாயா நோக்கியே பெருமளவு கவரப்பட்ட காரணத்தினுல் இத்தகைய போட்டி தவிர்க்கப்பட்டிருந்தது.

பெருந்தோட்ட நடவடிக்கைகளுக்குப் புறம்பாகவும் சில தொழில்கள் இலங்கையின் கவனத்தை ஈர்த்திருந்தன. அவற்றுட் காரீய உற்பத்தி யும், இரத்தினக் கல் அகழ்வும் பிரதானமாகக் குறிப்பிடத்தக்கவை. காரீயச் சுரங்கத் தொழில் 1830 களின் பிந்திய கட்டத்திலும் 1840 களி லும் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் 1860 களில் தான் மிகுந்த வேகமுடையதொன்முக மாறியிருந்தது. ஐக்கிய அமெரிக்காவி லும், பிரித்தானியாவிலும் காரீயத்திற்கு ஏற்பட்ட கேள்வி அதற்கான தூண்டுதலாக அமைந்தது. அத்தொழிலிற் செயற்பட்ட (ஐரோப்பியருக் குச் சொந்தமான) ஒரு சில ஏற்றுமதி ஏஜன்சிகளைத் தவிர அது முற்றுச் சிங்களவரின் உடைமையாகவே விளங்கியிருந்தது.[42] அதே போன்று இரத்தினபுரி மாவட்டத்தில் ஒழிப்படுத்தப்பட்டிருந்த இரத்தினக் கல் அகழ்வும் இலங்கையருக்குக் கணிசமானளவு வருமானத்தைப் பெற்றுக்

கொடுக்கக் கூடிய ஒரு தொழிலாயிருந்தது. முஸ்லிம் மக்கள் மத்தியிலான உயர் வர்க்கத்தினர் அதனை அடிப்படையாகக் கொண்டே பெருமளவுக்கு வளர்ச்சி பெற்றிருந்தனர்.[43] எனினும் பிரித்தானிய முதலீட்டாளர் அவற்றில் அக்கறை கொள்ளாமை இவ்விரு தொழில்களினதும் முக்கிய பண்பாகக் காணப்பட்டது.

மேற் குறித்தவை நேரடியான பொருளாதார அலுவல்களெனின் அவற்றிற்குப் புறம்பாகவும் இலங்கையர் வருமானம் உழைத்துக் கொள்வதற்கான சில மார்க்கங்கள் பிரித்தானியராட்சியின் கீழ் உருவாகியிருந்தன. அரசாங்க சேவையிலான நிர்வாகப் பதவிகள் அவற்றுட் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. எனினும் அவற்றின் முக்கியமான தன்மை என்னவெனில் அவை முற்றாக ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டின் கீழிருந்தமையேயாகும். அவர்களின் தயவினூடாகவே இலங்கையர் அப்பதவிகளைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. ஆரம்ப காலத்திலிருந்தே பிரித்தானியர், உயர் மட்டத்திலான முக்கிய பதவிகளைத் தம் வசம் வைத்துக் கொண்டு, அதிக முக்கியத்துவமற்ற நடு மட்ட, கீழ் மட்டப் பதவிகளையே இலங்கையருக்குத் திறந்து விட்டிருந்தனர். இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கிலக் கல்வி முறைமையும் அதற்கேற்ற வகையிலேயே அமைந்திருந்தது. அதாவது, உள் நாட்டு நிர்வாகத்திற்கான, ஆங்கில மொழியிற் பயிற்றப்பட்ட, மலிவான, தரம் குறைந்த ஊழியரை வழங்குவது அதன் நோக்கங்களுள் முதன்மை வாய்ந்ததாயிருந்தது.[44] அரசாங்க நிர்வாக அமைப்பின் உச்சப் பதவியாகிய சிவில் சேவையை மிக மட்டுப்படுத்தப்பட்ட ஒரு முறையிலேயே ஆங்கிலேயர் உள்நாட்டவருக்கு விட்டுக் கொடுக்கத் தயாராயிருந்தனர். 1920 களிலிருந்து ஓரளவுக்குக் கூடியளவான இலங்கையர் இப்பதவிகளைப் பெற்றுக் கொண்டனரெனினும் அவற்றின் மீதான கட்டுப்பாட்டை ஆங்கிலேயர் பூரணமாகத் தளர்த்தியிருக்கவில்லை.[45] உண்மையில், இக்காலப் பகுதியில் அரசாங்கப் பதவிகளை அடைவதற்குரிய சாதனமாகிய ஆங்கிலக் கல்வியை ஒரு சிறு தொகையினருக்கு மாத்திரம் மட்டுப்படுத்துவதற்குப் பிரித்தானிய நிர்வாகம் பெரிதும் முயன்றது.[46] எனவே அரசாங்கப் பதவிகள் ஆங்கிலேயரின் தயவிலன்றி வேறு வகையில் இலங்கையருக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கவில்லை.

அரசாங்கப் பதவிகளுடன் இணைந்த வகையில், ஆங்கிலக் கல்வியின் வழி, இலங்கையர் வாழ்க்கைத் தொழிலாகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட சில துறைகளையும் குறிப்பிட முடியும். அவை உள்நாட்டில் இரண்டாந்தர ஆங்கிலக் கல்வியைப் பூர்த்தி செய்த பின்பு பிரித்தானிய பல்கலைக் கழகப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெற்றமையின் விளைவாக உருவாகியிருந்தன.[47] வைத்திய, சட்டத் துறைகள் அவற்றுள் முன்னணி வகித்தாலும் மற்றும் ஆசிரியர், பத்திரிகையாளர், நில அளவையாளர், பொறியியலாளர், கணக்காளர் போன்ற சேவைகளும் குறிப்பிடத்தக்கன. இவை யாவும் உள்நாட்டவருக்கு முன்னேற்றப் பாதையைத் திறந்து விடுவனவாயிருந்தன. இச்சேவைகளிற் பெரும்பான்மையானவற்றிலான பதவிகள் அரசாங்க சேவையினூடாகவே, குறிப்பாகத் தொடக்க நிலைகளிற், கிடைக்கப் பெற்ற போதும், மேற் கொண்டு சுயமான முறையிலும் பலர் தொழில் பார்க்கத் தொடங்கியிருந்தனர். சட்டத் துறையில் ஈடுபட்ட

இலங்கையரின் எண்ணிக்கை 1901 குடி மதிப்பின் போது 356 ஆகவிருந்து 1921 குடி மதிப்பில் 800 ஆக உயர்வடைந்திருந்தது. அதே போல வைத்தியத் துறையிலிருந்த இலங்கையர் தொகை அதே காலப் பகுதியில் 323 லிருந்து 789 ஆகவும், நில அளவையாளர் சேவையிலிருந்தோரின் எண்ணிக்கை 160 லிருந்து 465 ஆகவும் உயர்ந்திருந்தது.[48]

அரசாங்கப் பதவிகளும் ஏனைய வாழ்க்கைத் தொழில்களும் ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் உள்நாட்டவர் மூலதனத்தைத் திரட்டிக் கொள்வதற்கான ஒரு சாதனமாகச் செயற்பட்டிருந்தன. அவை, ஒப்பீட்டு ரீதியாகக், கணிசமானளவு வேதனத்தைச் சம்பாதித்துக் கொடுத்தவிடத்து அதன் ஒரு பகுதியைச் சேமித்துக் கொள்ளக் கூடியதாயிருந்தது. ஆனால் இவ்வாறான நேர்க் கணிய நன்மையை விட மறைமுக நிலையிலேயே அதிகளவான நன்மைகள் பெறப்பட்டன எனலாம். இது விடயத்தில் அரசாங்க சேவையானது குடியேற்றநாட்டுவாதத்திற்கு முற்பட்ட முடியாட்சியின் போது எவ்வாறு அந்தஸ்து, அதிகாரம் என்பவற்றின் நிலைக்களனாகக் காணப்பட்டதோ, அவ்வாறே குடியேற்றநாட்டுவாத காலத்திலும் தொடர்ந்திருக்கத் தலைப்பட்டது.[49] இந்நிலையில் ஒருவர் வகித்த பதவிக்கேற்ப அதிகாரத்திற்குட்பட்ட வகையிலும் அதற்குப் புறம்பாகவும் குறிப்பிடத்தக்க செல்வாக்கை அவர் பிரயோகிக்க முடிந்தது. அவர் அநுபவித்த செல்வாக்கின் அளவுக்குப் பதவியுடன் இணைந்த வேதனத்திற்கு அப்பாற்பட்ட முறைகளிலும் அவர் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முடிந்தது. லஞ்சம் பெறுவது கூட அதற்கு விதி விலக்காயிருக்கவில்லை. அவற்றிற்கு மேலாக ஒருவர் செய்யும் தொழில், வகிக்கும் பதவி என்பவற்றிற்கேற்ப அவருடைய திருமணத்தின் போது தகுந்த சீதனத்தையும் பெற்றுக் கொண்டார். சீதனம் ஓர் இரண்டாந்தர நிலையில் வருமானத்தை விரிவுபடுத்துவதற்கான நிச்சயமான ஒரு மார்க்கமாக விளங்கியிருந்தது.[50] செல்வந்த நிலையிலுள்ள இரு குடும்பங்கள் திருமணத்தின் மூலம் ஒன்று சேர்ந்த போது அவற்றின் செல்வம் மேலும் திரட்சியடைந்ததுடன் வலிமையும் பெற்றது. சீதன வருமானம் பணம், சொத்து என்ற இரண்டையும் உள்ளடக்கிய காரணத்தினால், பல சந்தர்ப்பங்களில், மிகக் கணிசமான ஓர் அளவாகக் காணப்பட்டது.

ஆகவே தொகுத்து நோக்கின், ஆங்கிலேயராட்சிக் காலத்தில், இலங்கையர் புதிதாக வருமானம் உழைத்துக் கொள்ளக் கூடியதாயிருந்த அநேக வாய்ப்புக்கள், பல்வேறு மட்டங்களிலும் உருவாகியிருந்தன. இலங்கையில் உயர், நடுத்தர நிலைகளிலிருந்தோர் அவற்றை நன்கு பயன்படுத்திக் கொள்ளவும் தவறவில்லை. எனினும் அத்தகைய வாய்ப்புக்களிலும், அவற்றை இலங்கையர் பயன்படுத்திக் கொண்ட பான்மையிலும் காணப்பட்ட சில தனிப் பண்புகள் எமது சிறப்பான கவனத்திற்குரியவை.

## III

மேற் கூறியவாறு பிரித்தானியராட்சிக் காலத்தில் இலங்கையர் ஈடுபட்ட மூலதனத் திரட்டல் நடவடிக்கைகளை ஒன்றாக எடுத்து நோக்குவோமாயின் அவை அனைத்தும் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ

பிரித்தானியர் மீது தங்கியிருப்பனவாகவே வளர்ந்திருந்தன. உள்நாட்டவரின் பெருந்தோட்ட முயற்சிகள் யாவும் ஐரோப்பியரின் செயல் விளக்கத்தினை அடிப்படையாகக் கொண்டிருக்க அவர்கள் ஆரம்பித்த ஆதார சேவைகளும், பெற்றுக் கொண்ட அரசாங்கப் பதவிகளும் நேரடியாகவே பிரித்தானியரின் தயவில் தங்கியிருந்தன. சுயமாக வாழ்க்கைத் தொழில்களை மேற்கொண்ட இலங்கையர் கூட இத்தகைய செல்வாக்கினின்றும் விடுபட முடியவில்லை. தனிப்பட்ட முறையில் தொழில் செய்த வழக்கறிஞரும், டாக்டரும், ஆங்கில நாட்டு மரபுப்படி அந்நெறிகளைப் பயின்றிருந்தமை ஒரு புறமிருக்க, பிரித்தானியக் குடிகளையும், பிரித்தானியக் கம்பெனிகளையும், தமது பெறுமதி மிக்க நிரந்தர வாடிக்கையாளராகவும் பெற்றிருந்தனர். அதே போலப் பெருந்தோட்டச் சொந்தக்காரரும், காரியச் சுரங்க உடைமையாளரும் அரசாங்கத்திலிருந்து விலகிய நிலையில் இயங்கிய போதும், பிரித்தானியருடைய செல்வாக்கினின்றும் முற்றாக விடுபட முடியவில்லை. அவர்களுடைய ஏற்றுமதி வர்த்தகம் பிரித்தானிய முகவர் இல்லங்கள், கப்பற் சேவை நிறுவனங்கள், காப்புறுதி நிலையங்கள் என்பவற்றுடன் தொடர்பு கொண்டது மாத்திரமன்றி, உற்பத்திப் பொருட்களுக்கான சந்தையும் பிரித்தானியாவில் அல்லது பிரித்தானிய ஏகாதிபத்தியவாதத்திற்குட்பட்ட நாடுகளில் தான் காணப்பட்டது. ஆகவே பிரித்தானியரின் முற்றான தயவும் ஆதரவுமின்றி இலங்கையர் தமது தொழில்களில் நீடித்திருப்பதோ லாபம் உழைப்பதோ முடியாமலிருந்தது.

இலங்கையர் வெளிப்படுத்திய இவ்வாறான தங்கியிருக்கும் தன்மை மேல்வாரியான நிலையில் தோற்றமளிப்பதை விட உள்ளூர மிக நெருக்கமான ஒரு முறையில் வளர்ந்து சென்றமை குறிப்பாகக் கவனிக்கத்தக்க தொன்றாகும். அவர்கள் ஏற்றுக் கொண்ட அரசாங்கப் பதவிகளும் வாழ்க்கைத் தொழிலாகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட துறைகளும் ஆங்கில மொழி மூலம் பெற்ற கல்வியை அடிப்படையாகக் கொண்டிருந்தவிடத்துத் தொடக்க நிலையிலிருந்தே ஆங்கிலேயருடன் ஒரு மொழி வழித் தொடர்பை இலங்கையர் நிறுவிக் கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தனர். எந்தளவுக்கு இலங்கையரின் கல்வித் தரம் உயர்ந்தும் அதன் வழி அவர்கள் பெற்றுக் கொண்ட பதவி, தொழில் என்பன மேனோக்கியும் சென்று கொண்டிருந்தனவோ அந்தளவுக்கு இந்தத் தொடர்பு மேன்மேலும் இறுக்கமடைந்து கொண்டு சென்றதெனலாம். குறிப்பாக உயர் கல்வியைப் பொறுத்தவரை, 1921 ஆம் ஆண்டு பல்கலைக்கழகக் கல்லூரியொன்று கொழும்பில் நிறுவப்படும் வரை,[51] அதற்கான வசதியெதுவும் இலங்கையில் உருவாகாத காரணத்தினால் உயர் கல்வி பெற முன் வந்த எவரும் ஆங்கிலப் பல்கலைக்கழகங்களையே நாட வேண்டியிருந்தது. 1921 க்குப் பின்பு கூட இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி லண்டன் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டங்களுக்கே மாணவர்களைத் தயார் செய்ததால் அந்நிலையில் அதிக மாற்றம் ஏற்படவில்லை. கல்வி மூலம் ஏற்படத் தொடங்கிய இவ்வாறான தொடர்பு அதனுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட தொன்றாயிராமல் நாளடைவில் உள்நாட்டவர் வாழ்க்கையின் சகல துறைகளையும் பீடிக்க முற்பட்டிருந்தது. ஆங்கிலத்திற் கல்வி பயின்ற பெரும்பாலானோர் படிப்படியாக ஆங்கில வாழ்க்கை முறையையும் நடையுடை பாவனைகளையும் பின்பற்றத் தலைப்பட்டனர். அதன் மூலம், அவ்வாறான

இலங்கையர் நாட்டின் சாதாரண மக்களுடன் தொடர்புபடும் தேசியத் தன்மை சார் அலுவல்களிலிருந்து அந்நியப்படும் ஒரு வளர்ச்சியும் ஏற்பட்டிருந்தது. அவ்வகையில் இலங்கையர் பொருளாதார ரீதியாக மாத்திர மன்றிச் சமூக கலாச்சார நிலைகளிலும் ஆட்சியாளர் வர்க்கத்தினைப் பெரிதும் அண்மித்திருந்தனர்.

மறு புறம், ஆங்கிலேயர் நிலையிலிருந்து நோக்குமிடத்து, அவர்களைப் பொறுத்தவரை, இலங்கையர் முயற்சிகள் தமது முதல் நிலை நடவடிக்கையாகிய கைத்தொழில் துறையைச் சாராத வரை அதையிட்டு அவர்கள் தம்மை அதிகம் அலட்டிக் கொள்ள விரும்பவில்லையென்றே கூறலாம். இந்தியாவைப் போல, அது போன்ற ஒரு சூழ்நிலை அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இலங்கையில் ஒரு போதும் ஏற்படவும் இல்லை. இந்த முதன்மைத் தேவை பூர்த்தி செய்யப்பட்டதும் உள்நாட்டவருடன் பிரித்தானியர் பொருதுவதற்குரிய முக்கியமான நிபந்தனைகளுள் ஒன்று நீங்கிப் போயிருந்தது. அதற்கு மேலாகவும் ஆங்கில முயற்சிகள், ஏற்கெனவே நாம் எடுத்துக் காட்டியவாறு, ஒன்றில் உள்நாட்டவரின் கவனம் அவை நோக்கித் திரும்பினாலும் அதனுற் பாதிக்கப்படாத அளவிற்குப் பலம் பொருந்தியவையாகவும் அல்லது இலங்கையர் இயல்பாகவே சிறந்த வாய்ப்பினைப் பெற்றிருந்த சில தொழில்களைத் தவிர்த்துக் கொள்பவையாகவும் காணப்பட்டன. ஆனுல் அதே நேரத்தில், ஆங்கிலேயரும் ஆரம்பத்திலிருந்தே படிப்படியாக உள்நாட்டவர் மீது பல வகைகளிலும் தங்கியிருக்கும் ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர். அது நேரடியாக வெளிப்படாது போயினும் மறைமுகமாகத் தொடர்ந்து செயற்படுவதொன்முயிருந்தது. இலங்கையர் பல கட்டங்களில் வழங்கிக் கொண்டிருந்த ஆதார சேவைகளின்றி இலங்கையிலான தமது பொருளியல் முயற்சிகள் அதிக வெற்றி தர மாட்டா என்பதை ஆங்கிலேயர் நன்குணர்ந்திருந்தனர். சுருக்கமாகக் கூறின், இவ்விரு சாராரும் ஒரு முழுமையான தொழிலின் வேறுபட்ட கட்டங்களைப் பூர்த்தி செய்வோராகவே விளங்கியிருந்தனரெனலாம்.

ஆகவே பிரித்தானியருக்கும் இலங்கையருக்குமிடையே பொருளியல் மட்டத்தில் உண்டான தொடர்பு ஒருவரில் மற்றவர் தங்கியிருக்கும் ஒரு பரஸ்பர நிலைத் தொடர்பாயிருந்ததேயன்றிப் போட்டி மனப்பான்மையினுல் உந்தப்பட்டதொன்முயிருக்கவில்லை. எனவே இவ்விரு சாராரும் ஒரே கொள்கையுடையவர்களாகவும் ஒரே நோக்குடையவர்களாகவும் வளர்ந்து செல்வது பெருமளவுக்குச் சாத்தியமாயிற்று. இவ்வாமுக அவர்களிடையே ஏற்பட்ட ஒற்றுமையின் தன்மையை மைக்கல் ரொபேட்ஸ் (Michael Roberts) தெளிவாகக் முன்வைக்கிருர்:[52]

> "...சொத்துடையவர்கள் அல்லது சொத்தைத் தேடிச் செல்பவர்கள் என்ற முறையில் இலங்கை அரசாங்க ஊழியர், சாராய விற்பனை வாடகையாளர், கொந்தராத்துக்காரர், வியாபாரிகள், வழக்கறிஞர், டாக்டர், காரிய உற்பத்தியாளர், பெருந்தோட்டச் சொந்தக்காரர் ...சுதேசிய பூர்ஷ்வாக்கள் முற்ருகவே, தீவின் ஏற்றுமதி வர்த்தகம், பொருளாதாரம் என்பவற்றை ஆக்கிரமித்திருந்த பிரித்தானிய இடைத்தரகு பூர்ஷ்வாக்களுடன் ஒன்றுபடும் பொதுவான நலன்களைப்

பகிர்ந்து கொண்டனர். இரு சாராருமே தனியார் சொத்துடைமை, லாப நோக்கம், ஒப்பந்தச் சட்டம், தனியார் சுதந்திரக் கருத்து என்பவற்றைப் பேணுவதற்குத் தம்மை அர்ப்பணித்திருந்தனர்.

இதிலிருந்து பிரித்தானிய, இலங்கை முதலீட்டாளரிடையே வெறுமனே ஒற்றுமையன்றி வர்க்க ரீதியான ஓர் இணக்கம் ஏற்பட்டிருந்தமை நன்கு வெளிப்படுகின்றது. இசைவான பொருளாதாரத் தொடர்புகளின் வழி ஒன்று பட்டிருந்த இவ்விரு சாராரும் முதலாளித்துவ நலன் காக்க உறுதி பூண்டிருந்தனர்.

மேற் கூறிய வகையிற் பொருளாதார மட்டத்திலேற்பட்ட இவ்வாறான இணக்கம் நாட்டின் சமூக, அரசியல் நிலைகளிலும் மாறுபாடுகளைக் கொண்டு வருவது தவிர்க்க முடியாமலிருந்தது. அவ்வாறான சமூக, அரசியல் தாக்கங்களை முன் வைப்பதே கட்டுரையின் எஞ்சியுள்ள பணியாகும்.

## IV

19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி முதலே சமூக மாற்றங்களும் படிப்படியாக ஏற்படத் தொடங்கியிருந்தன. முதற்கண் அந்நிய முதலாளித்துவ அலுவல்களுக்குச் சேவை செய்வதில் ஆரம்பித்துப் பின்பு சிறிது சிறிதாக அத்தகைய அலுவல்களையே தானும் அரவணைத்திருந்த உள்நாட்டு முதலீட்டாளர் கூட்டம் இலங்கையின் ஓர் உயர் வர்க்கமாக வளர முற்பட்டிருந்தது. இந்த உயர் வர்க்கம், மேற்கத்திய நாடுகளுடன் ஒப்பிடக் கூடிய வகையில், தொழில் முயற்சிகளில் ஈடுபடும் ஓர் உண்மையான முதலாளித்துவ வர்க்கம் எனக் குறிக்கப்பட முடியாவிட்டாலும், நிச்சயமாக, முதலாளி வர்க்கத்தின் சில சாயல்களைப் புலப்படுத்தும் ஓர் உயர் மத்திய வர்க்கமாகத் தென்பட்டது. இவ்வுயர் மத்திய வர்க்கத்தினை வசதி கருதி மேல் மட்டம், கீழ் மட்டம் என இரு தரங்களிற் பிரித்து நோக்க முடியும். மேல் மட்ட உயர் மத்திய வர்க்கத்தினரே நேரடியான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டவர்களாகவும் உயர்தர அரசாங்கப் பதவிகளை வகிப்போராகவும் விளங்கியிருந்தனர். கீழ் மட்ட மத்திய வகுப்பினர் பொதுத் துறை மற்றும் வங்கித் துறை, வர்த்தகத் துறை போன்றவற்றில் தொழில் புரியும் ஏராளமான ஊழியராகக் காணப்பட்டனர். இவ்விரு சாராருக்கும் புறம்பாகத் தொழிலாளர் வர்க்கமொன்றும் மெதுமெதுவாக உருவம் பெற்றிருந்தது. இலங்கையில் மேற் கொண்டு இடம் பெற்ற அரசியல் வளர்ச்சியில் வர்க்க வேறுபாடுகள் செலுத்திய செல்வாக்கினை ஆராயப் புகுமிடத்து இலங்கையின் தொழிலாளர் வர்க்கத்தின் சரியான தன்மை பற்றியும் ஓரளவு கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகின்றது.

இலங்கையின் (பிரித்தானிய – உள்நாட்டு) முதலாளி வர்க்கம் முற்றாகவே தொழில் முயற்சிகளைப் புறக்கணித்தவிடத்துக் கைத்தொழிற் பாட்டாளி வர்க்கமொன்று நாட்டில் எழுச்சியடைவதற்கு வாய்ப்பிருக்கவில்லை. ஆகவே, இந்நிலையில், இலங்கையில் வளர்ச்சியடைந்த தொழிலாளர் வர்க்கம் பெருந்தோட்ட அலுவல்களையொட்டியதாகவன்றி வேறு வகையில் உருப் பெற முடியவில்லை. பெருந்தோட்ட வேலைகளில் நேரடியாக ஈடுபட்ட தொழிற் படை முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலைகளின் கீழ் ஓர் அந்நிய

நிலையில் – தென்னிந்தியாவிலிருந்து – ஊற்றெடுத்ததொன்றாகக் காணப்பட்டது. அதற்கான காரணங்களை ஆராய்வதோ, அத்தகைய தொழிற்படையின் தன்மைகளை விரிவு படுத்துவதோ இக்கட்டுரையின் நோக்கிற்கு அப்பாற்பட்டதாகும். எனினும் கடுமையான அடக்கு முறைகளின் கீழ், ஓர் அரைகுறை அடிமை நிலையில், வைக்கப்பட்டிருந்த பெருந்தோட்டத் தொழிலாளர் வர்க்கம், மலிவான கூலியை முதலீட்டாளர் நாடி நின்ற முதலாளித்துவச் செய்முறையின் ஒரு பகுதியேயன்றி வேறில்லை என்பதை மாத்திரம் இங்கே சுட்டிக் காட்ட முடியும்.[53] ஆகவே பெருந்தோட்டச் செய்கையின் நேரடியான தொழில் வாய்ப்புக்களை நோக்கி இலங்கையின் சுதேசிய சனத்தொகை கவரப்படாத நிலையில் நாட்டின் பெரும்பான்மை மக்கள் தொடர்ந்தும் நிலத்துடன் பிணைக்கப்பட்ட குடியான்களாகவே நீடித்திருந்தனர். மறு புறம், சுதேசிய மட்டத்தில் எழுச்சியடைந்த தொழிலாளர் வர்க்கம் பெருந்தோட்டத் துறைக்குரிய துணை நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டதொன்றாகவே வளர்ந்து செல்லலாயிற்று. அவ்வாறான நடவடிக்கைகள், தவிர்க்க முடியாத வகையிற், கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலுமே இடப்படுத்தப்பட்டன. ஒழுங்கு படுத்தப்பட்ட நகரத் தொழிலாளர் வர்க்கமொன்று வளர்ச்சியடைவது அதன் காரணமாகவே சாத்தியமாயிற்று.

இந்தத் தொழிலாளர் வர்க்கம் பலதரப்பட்ட இன, மதங்களைச் சேர்ந்தவரைக் கொண்டிருந்த போதும், அது அவ்வாறான அடிப்படைகளைக் கொண்டு பிரிக்கப்பட்டதொன்றாயிருக்கவில்லை. அதற்குப் பதிலாக அது பயிற்றப்பட்டவர், பயிற்றப்படாதவர் என்ற பாகுபாட்டையே முக்கியமானதாகக் கொண்டிருந்தது.[54] அவர்களை நடு நாயகமாகக் கொண்ட நகரப் பொருளாதாரம் முகவர் இல்லங்கள், போக்குவரத்து ஏஜன்சிகள் என்பவற்றையும் பெருந்தோட்ட உற்பத்திகளைப் பதனிட்டுப் பொதி செய்யும் தொழிற்சாலைகள், பொறியியல் தொழில் நிலையங்கள், சில்லறைக் கடைகள், சேவைக் கைத்தொழில்கள் போன்றவற்றையும் அரவணைத்ததொன்றாகக் காணப்பட்டது.

பெருந்தோட்டத் துறைக்குச் சேவை செய்யும் முகமாக நிர்மாணிக்கப்பட்ட போக்குவரத்து அமைப்பு முறையே பயிற்றப்பட்ட தொழிற் படையொன்று பெருகுவதற்குரிய முக்கிய சாதனமாகச் செயற்பட்டது. குறிப்பாகப் புகையிரதப் பாதை அமைப்பு முறையொன்று படிப்படியாகக் கட்டியெழுப்பப்பட்டதன் விளைவாக நவீன சாதனங்களைக் கொண்ட வேலைத் தளங்கள் நிறுவப்பட்டு ஏராளமான தொழிலாளர் அச்சாதனங்களைக் கையாள்வதிலும் பயிற்சி பெறலாயினர். 1901 — 1911 தசாப்தத்திற் புகையிரத சேவைத் தொழில்களிலான தொழிலாளர்களின் எண்ணிக்கை 5,800லிருந்து 9,500ஆக, அதாவது ஏறக்குறைய 64 சத வீதத்தினால், அதிகரித்தது.[55] 1911ஆம் ஆண்டு நிலவியிருந்த ஒன்பது புகையிரத இயந்திர வேலைத்தளங்கள் மொத்தம் 2,800 பயிற்றப்பட்ட தொழிலாளரை வேலைக்கமர்த்தியிருந்தன.[56] அதே நேரத்தில், புகையிரதப் பாதைகள், பாலங்கள், கட்டடங்கள் என்பவற்றைப் பேணுவதற்குப் பொறுப்பான சிவில் பொறியியற் பகுதியை உள்ளடக்கிய புகையிரதப் பாதைத் தொழில் திணைக்களம் 4,300 தொழிலாளரைக் கொண்டிருந்தது.[57] புகையிரத சேவைக்

குப் புறம்பாக, வீதிப் போக்குவரத்து அபிவிருத்திக்கும் பயிற்றப்பட்ட தொழிலாளர் பெருந்தொகையாகத் தேவைப்பட்டனர். வீதி நிர்மாணம், பேணல், திருத்தம் என்பவற்றுக்குப் பொறுப்பாயிருந்த பொது வேலைகள் திணைக்களம் 1912 அளவில் 21,000 பயிற்றப்பட்ட ஊழியரை வேலைக்கமர்த்தியிருந்தது.[58] அதே போலத் துறைமுகக் கப்பற் போக்குவரத்துச் சேவைகளும் பயிற்றப்பட்ட தொழிலாளர் வர்க்கமொன்றின் வளர்ச்சியை ஊக்குவித்திருந்தன. நீராவிக் கப்பல்களைப் பழுது பார்ப்பது மாத்திரமன்றிப் பெருந்தோட்ட உற்பத்திகளின் பதப்படுத்தலிற் பயன்படுத்தப்படும் கனரக இயந்திரங்களையும் பழுது பார்த்த கொழும்பு இரும்புத் தொழில்கள் நிறுவனம் (Colombo Ironworks) 30 பிரித்தானியப் பொறியியலாளரின் மேற்பார்வையின் கீழ் ஏறக்குறைய 1000 உள்நாட்டவரை வேலைக்கமர்த்தியிருந்தது.[59] அது மாத்திரமன்றிக் கார்ச் சாரதிகள், மின்சாரத் தொழிலாளர், நீர், வடிகால் தொழிலாளர் என்போரும் பயிற்றப்பட்ட குழுவினராகவே வளர்ச்சியடைந்திருந்தனர். பயிற்றப்பட்ட தொழிற் படையை ஒன்றாக எடுத்து நோக்குமிடத்து அது ஏனைய குழுக்களை விட உயர்ந்த அறிவுடைய தொழிலாளரைக் கொண்டிருந்தது. அவர்களிற் பெரும்பாலோர் ஒரே இடத்தில் வேலை செய்த காரணத்தினால் வர்க்க உணர்வை வளர்த்துக் கொள்வதும் அதன் அடிப்படையில் தம்மை ஒழுங்குபடுத்திக் கொள்வதும் சுலபமாயிருந்தது.

பயிற்றப்பட்ட தொழிலாளர் வர்க்கத்துடன் இணைந்த வகையிற் பயிற்றப்படாத தொழிற் படையொன்றும் நகர்ப் புறங்களில் நிலவியிருந்தது. அதனைச் சேர்ந்தவர்களிற் பெரும்பாலானோர் துறைமுகம், புகையிரத சேவை, பொது வேலைகள் திணைக்களம் என்பவற்றில் தொழில் புரிந்தனர். கொழும்பு மாநகர சபையும் அத்தகையவர்களிற் பலரைப் பலவித கடமைகளுக்குமென அமர்த்தியிருந்தது. பயிற்றப்படாத தொழிலாளரிற் பலர் பெருந்தோட்டத் தொழிலாளரைப் போன்று தென்னிந்திய வம்சாவழியினராக விளங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. தனியாகத் தொழில் செய்த பலரையும் பயிற்றப்படாத கூட்டத்தில் அடக்க முடியும். வண்டிக்காரர், ரிக்ஷாக்காரர், தையற்காரர், சப்பாத்துத் தைப்போர், இறைச்சிக் கடைக்காரர் போன்ற இன்னோரன்னவர்கள் இப்பட்டியலிற் சேர்த்துக் கொள்ளப்படத் தக்கவர். பயிற்றப்படாத தொழிலாளர் தகுந்த அறிவு படைத்திராததுடன் பயிற்றப்பட்டவர்களை விட வறியவர்களாகவும் வர்க்க ரீதியாகப் பெருமளவு ஒழுங்கு படுத்தப்படாதவர்களாகவும் விளங்கியிருந்தனர். ஆகவே ஒரு வர்க்கம் என்ற வகையிற் பயிற்றப்பட்டவர்களின் அளவுக்கு இவர்கள் முக்கியத்துவம் பெறவில்லை. எனினும் எமது வரையறையைப் பொறுத்தவரை பொதுவான தொழிலாளர் வர்க்கம் என்பதில் இவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

எனவே இலங்கை உலக முதலாளித்துவச் சுழலினுள் இழுக்கப்பட்டமை காரணமாக அதன் சமுதாயமானது நாளடைவில் வர்க்க சார்புடைய தொன்றாக மாற்றமடைந்திருந்தமை தெளிவானது. முதலாளித்துவ அலுவல்கள் பலவற்றிலும் அக்கறை கொண்டு மூலதனத்தைத் திரட்டிக் கொள்ள முற்பட்டிருந்த உயர் வர்க்கமானது பிரித்தானிய முதலீட்டாளர் வர்க்கத்தி

னையும் அதன் வழி பிரித்தானிய ஆட்சியாளரையும் சார்ந்ததொன்றாகவே வளர்ந்திருந்தது. மறு புறம் தொழிலாளர் வர்க்கமானது மிகக் குறைந்த கூலியளவுகளைக் கொண்டு நாட்டின் குடியான்கள் வர்க்கத்தை அண்மித்திருந்ததுடன் உயர் வர்க்கத்திலிருந்து துண்டிக்கப்பட்டதொன்றாகவும் காணப்பட்டது.

ஆகவே இலங்கையின் பொருளாதார, சமூக அமைப்பினை ஒன்றாக எடுத்து நோக்குமிடத்து, அது உள்நாட்டு முயற்சியாளரின் முதலாளித்துவ இணக்கம் காரணமாக இரட்டைத் தன்மை கொண்டதொன்றாக வளர்ச்சியடைந்திருந்தமை அவதானிக்கத்தக்கது. இலங்கை உயர் வர்க்கத்தினரின் பொருளாதார அலுவல்கள் பிரித்தானிய முதலாளி வர்க்கத்தினரை நோக்கி அவர்களை எடுத்துச் சென்றவிடத்து அதனுடன் இணைந்த வகையில் ஏற்பட்ட இன்னொரு செய்முறை யாதெனில், தமது உள்நாட்டுச் சகாக்களாகிய பெரும்பான்மையான நாட்டு மக்களிடமிருந்து இலங்கை முயற்சியாளர் மேன்மேலும் விலகிச் சென்றமையாகும். இலங்கை மக்களிற் பெரும்பான்மையினர் தொடர்ந்தும் குடியான்களாகவே விளங்கியிருந்ததுடன் அவர்களுடைய விவசாய நடவடிக்கைகளும் சீவனோபாய மட்டத்திலிருந்து அதிக தூரம் முன்னேறாதனவாகவே காணப்பட்டன. உள்நாட்டவர் ஆரம்பித்த பெருந்தோட்ட முயற்சிகளிற் கூட இலங்கையர் பெருமளவில் வேலை வாய்ப்புப் பெற்றதற்கான ஆதாரங்கள் மிகவும் குறைவானவையே. உண்மையில், பிரித்தானியரின் முதலீட்டு நடவடிக்கைகள் நாட்டில் இரட்டை அமைப்பொன்று உருவாவதற்கு வகை செய்தவிடத்து, இலங்கையரும் அதே முயற்சிகளில் ஈடுபடுதல் அவ்வமைப்பினை முறியடிப்பதற்கு உதவியிருக்க வேண்டும். அதாவது முதலீடுகள் ஒரு சாராரிடம் மாத்திரம் முடங்கிச் சிறப்புத் தன்மை பெறுவதற்குப் பதிலாக எல்லாரிடமும் பரவலாக்கப்படுவதற்குச் சுதேசிய முயற்சிகள் உதவியிருக்க வேண்டும். பிரித்தானியர் மாத்திரம் மேற்கொண்ட தொழில்களை இலங்கையரும் மேற்கொள்கின்றனரென்ற அளவில் இந்தப் பரவலாக்கல் ஏற்பட்டிருந்த போதும் அது ஒரு வர்க்க ரீதியான பரவலாக்கலாக இருக்கவில்லை. அதற்குப் பதிலாக வர்க்க ரீதியான ஒருங்கிணைப்பாகவே இருந்தது. பிரித்தானியருடைய தொழில் முயற்சிகளில் சுதேசிய மட்டத்திலிருந்தும் ஒரு சாரார் சென்றிணைந்து கொண்டனர். அதன் மூலம் பரவலாக்கல் இடம் பெறுவதற்குப் பதில் சிறப்பு நிலை மேலும் இறுக்கமடைந்திருந்ததென்றே கூற வேண்டும். மறு புறம், பிரித்தானியருடைய நடத்தையை விட இலங்கை முதலீட்டாளரின் நடத்தை குடியான்கள் வர்க்கத்தை மோசமாகப் பாதிக்கக் கூடியதொன்றாகவும் இருந்தது. ஏனெனில் றப்பர்ச் செய்கை போன்றவற்றில், நாம் ஏற்கெனவே எடுத்துக் காட்டியவாறு, பிரித்தானியர் நிலப் பற்றாக்குறையொன்றை எதிர் நோக்கிய போதும், உள்நாட்டவர் அதற்கென வயல் நிலங்களைத் தோட்ட நிலங்களாக மாற்றுகின்ற ஒரு செய்முறையை மேற்கொண்டிருந்தனர். அதனால் இலங்கையின் குடியான்கள் வெகுவிரைவில் எதிர்நோக்கிய கடுமையான நிலமின்மைப் பிரச்சினைக்கு உள்நாட்டு முதலாளி வர்க்கம் பெருமளவு தூண்டுகோலாயிருந்ததெனலாம்.

பொருளாதார மட்டத்தை விடச் சமூக மட்டத்தில் இரட்டைத் தன்மை மேலும் தெளிவு பெறுவதற்கு உள்நாட்டு முதலாளிகள் பெரிதும் உதவியிருந்தனர். பொருளாதார ரீதியாக எத்தகைய தொழிலை மேற் கொண்டாலும் சமூக மட்டத்திற் சுதேசிய அம்சங்களை இலங்கை முதலாளிகள் பேணிப் பாதுகாப்பது ஓரளவிற்காவது சாத்தியமானதொன்றேயெனலாம். எனினும் அவர்கள் அது விடயத்தில் எதுவித முயற்சியும் மேற் கொள்ளாது சமூக ரீதியாகவும் பிரித்தானிய முதலாளி வர்க்கத்தினரை அணுகும் ஒரு செய்முறையையே கைக்கொண்டிருந்தனர். குறிப்பாகத் தமது வாழ்க்கை முறையையும் நுகர்வு முறையினையும் இலங்கை முயற்சியாளர் வர்க்கம் பிரித்தானியருடைய தரத்திற்கு மாற்றியமைத்துக் கொண்டமை கவனிக்கத்தக்கது. அதன் முக்கிய பகுதியாகப் பிரித்தானியாவிலிருந்தே பல வகை நுகர்வுப் பொருட்களையும் இறக்குமதி செய்ய வேண்டியிருந்த போது, அது நீண்ட காலத்தில், பிரித்தானியப் பொருளாதாரத்திற்கு நன்மையாக முடிந்து இலங்கைப் பொருளாதாரத்தை (அந்நியச் செலாவணி இழப்பின் மூலம்) நலிவடையும்படி செய்ததை அவர்கள் உணரவில்லை. பிரித்தானியருடன் சமூக ரீதியாக ஏற்பட்ட ஒருங்கிணைப்பு, ஓரளவிற்கு, நாம் முந்திய பகுதியில் எடுத்துக்காட்டியவாறு, உள்நாட்டவர் மேற் கொண்ட தொழிலின் தன்மை, கற்ற ஆங்கிலக் கல்வி என்பவை காரணமாகத் தவிர்க்க முடியாததொன்றாயிருந்த போதும், இலங்கை முதலாளிகள், இயல்பாக ஏற்பட்ட இந்தப் போக்கினைக் கட்டுப்படுத்த முற்படுவதற்குப் பதிலாகக் கட்டவிழ்த்து விட்டிருந்தனர். அதன் விளைவாகத் தாம் அங்கத்துவம் பெற்றிருந்த சுதேசிய சமூகத்திலிருந்தே முற்றாகத் துண்டிக்கப்பட்டு (பிரித்தானியரைச் சார்ந்த) வேறான ஒரு கூட்டத்தினராக அவர்கள் வளர முற்பட்டிருந்தனர்.

## V

இவ்வாறானதொரு சமூக அமைப்பும் அது கட்டியெழுப்பப்பட்டிருந்த பொருளாதார அத்திவாரமும் இலங்கையின் அரசியல் வளர்ச்சிகளைச் செல்வாக்கினுக்குட்படுத்துவதற்கு அதிக காலம் எடுக்கவில்லை. அரசியற் பொறுப்பாட்சிக்கான கோரிக்கை உயர் வர்க்கத்தவரிடமிருந்து ஊற்றெடுத்த போது அதனை அடிப்படையாகக் கொண்ட அரசியல் ரீதியான தாக்கம், தரப்பட்ட குடியேற்ற நாட்டு வரையறையின் கீழ், இரு வகைகளில் வெளிப்பட்டதெனலாம். அவற்றுள் ஒன்று வெளிப்படையாக இயங்க மற்றது மறைமுக நிலையிற் செயற்படுவதாயிருந்தது.

முதலாவதாக, இலங்கையில் உருவாகிய அரசியற் சீர்திருத்தக் கோரிக்கைகள், இந்தியாவையோ அல்லது ஏனைய பல லத்தீன் அமெரிக்க நாடுகளையோ போன்றன்றி எப்போதுமே ஒரு மிதமான போக்கினைக் கொண்டிருக்கக் காணப்பட்டன. அவை கூடியளவு எச்சரிக்கையுடன் ஓரளவு பழைமைத் தன்மையும் கலந்து தீவிரம் குறைந்தவையாகவும் அதிகளவு கிளர்ச்சிப் போக்கு அற்றவையாகவும் விளங்கியிருந்தன. பிரித்தானியாவுடன் பொருதுவதன் மூலமன்றி அதனுடைய ஆதரவைப் பெற்றே இலங்கை டொமினியன் அந்தஸ்தை அடைய வேண்டுமென்பதும், அவ்வகையில் இலங்கை இந்தியாவையன்றிப் பேரரசின் பழைய குடியேற்ற நாடுகளாகிய

கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்றவற்றையே தனக்குரிய எடுத்துக்காட்டாகப் பின்பற்ற வேண்டுமென்பதும் தான் இலங்கையின் அரசியல் தலைமை கொண்ட கொள்கைகளாக அமைந்தன.[60] அதற்குக் காரணம் தமது சுதந்திரப் போராட்டம் பிரித்தானியருடனான சுமுக உறவைப் பாதித்து அதன் வழி தமது பொருளாதார நலன்களையும் தாக்கி விடக் கூடாதென்பதேயாகும். அதன் விளைவாக இலங்கையின் அரசியற் சுதந்திரக் கோரிக்கை தொடர்ச்சியான அரசியல் திட்டச் சீர்திருத்தங்களை வேண்டி நிற்பனவாயன்றி வேறு வகையில் ஏற்படவில்லை. அத்தகைய அரசியல் திட்ட வளர்ச்சி 1833 முதற் கொண்டு படிப்படியாக ஏற்பட்டிருந்ததுடன், வேறுபட்ட கட்டங்களில் வரையப்பட்ட அரசியல் திட்டங்களினூடாகவே இலங்கை தனது சுதந்திரத்தையும் பெற்றுக்கொண்டிருந்தது.[61] இந்த வளர்ச்சிச் செய்முறையின் இறுதியில் பூரண சுதந்திரத்தைப் பிரித்தானியா வழங்க முன்வந்த போது இலங்கை ஆரம்பம் முதற் கடைப்பிடித்து வந்த மிதமான போக்கு, இலங்கைக்கு உரிய வெற்றியை அளித்திருந்ததென்பதிலும் ஐயமில்லை. ஏனெனில் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கும் செயல் முறைகளிற் பிரித்தானிய அதிகாரிகள் நாட்டின் நீண்ட கால அரசியல் திட்ட அநுபவம், அது எப்போதும் கைக்கொண்டு வந்த மிதவாதத் தன்மை என்ற இரண்டையும் சாதகமான காரணிகளாக வலியுறுத்தியிருந்தனர்.[62]

இரண்டாவது நிலையிற், பிரித்தானியருடைய கோணத்திலிருந்து பார்க்கும் போது, இலங்கையில் ஒரு சாராருடன் வர்க்க ரீதியாக அவர்கள் கொண்டிருந்த இணக்கம் பொருளாதார ரீதியாக அந்நாட்டிலிருந்து அவர்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய நன்மைகளை ஒரு குறுகிய காலத்தில் மாத்திரமன்றி நீண்ட காலத்திலும் உத்தரவாதப்படுத்துவதாயிருந்தது. வல்லரசுகள் குடியேற்ற நாடுகளை வைத்திருப்பதன் அடிப்படையான நோக்கம் பொருளாதார வாய்ப்புக்களை அதிகப்படுத்திப் பொருளியல் நன்மைகளைப் பெருக்குவதாகவே இருந்ததால், அரசியல் அதிகாரத்தின் பிரயோகமின்றி அதனை நிறைவேற்றிக் கொள்ள முடிமாயின் அது பெரிதும் வரவேற்கக் கூடிய ஒரு சூழ்நிலை என்பதிற் சந்தேகமில்லை. இலங்கையில் இடம் பெற்ற வளர்ச்சிகள் பிரித்தானிய அரசியல் அதிகாரத்திற்கான தேவையைப் பெருமளவு குறைத்திருந்தன. ஆங்கில முதலீட்டாளருக்கும் இலங்கை முதலீட்டாளருக்குமிடையிலான இணக்கம் எந்தளவுக்கு இறுக்கமடைந்து கொண்டு சென்றதோ அந்தளவுக்குப் பிரித்தானிய அரசியல் மேன்மைக்கான அவசியமும் படிப்படியாகக் குறைவடைந்து கொண்டே சென்றது. ஆகவே அரசியல் திட்ட வரையறைக்குட்பட்ட முறையில் இலங்கையர் பொறுப்பாட்சி வேண்டி முன்வைத்த கோரிக்கைகளை அவை தம்மைச் சார்ந்த உயர் வர்க்கத்தினரிடமிருந்தே உருவாகிய வரை, ஆதரவான ஒரு முறையில் அவற்றைச் செவி மடுப்பதிற் பிரித்தானியருக்குப் பெருமளவு சிரமம் இருக்கவில்லை. இந்நிலையில், இலங்கையில் அறிமுகப் படுத்தப்பட்ட ஒவ்வொரு அரசியல் திட்டச் சீர்திருத்தமும் அரசியற் பொறுப்பாட்சி நோக்கிய முன்னேற்றப் படிகளாக அமைந்ததில் வியப்பில்லை. ஈற்றில் இந்தியா சுதந்திரம் பெறுவது உறுதியானதும், இலங்கையின் சுதந்திரம் வெறும் ஓர் ஒழுங்கு முறை சார்ந்த நிகழ்ச்சியாக இடம் பெறக் கூடியதாயிற்று. அரசியல் மட்டத்தில் ஏற்பட்ட இந்த மாற்றம், இலங்கையிலிருந்து பிரித்தா

னியர் பெற்றுக் கொண்டிருந்த பொருளாதார நலன்களை எவ்வகையிலும் அச்சுறுத்தவில்லை.

ஆகவே ஒரு முழு நிலை மட்டத்தில் நோக்குமிடத்துக் குடியேற்ற நாட்டுவாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டமையினால் இலங்கையில் ஏற்பட்ட ஒரேயொரு விளைவு யாதெனில் முன்பு பிரித்தானியரின் கைகளில் இருந்த ஆட்சிப் பொறுப்பு இப்போது இலங்கை உயர் வர்க்கத்தினரை அடைந்திருந்தமையேயாகும். இது வர்க்க ரீதியாக எதுவித திருப்பத்தினையும், குறிப்பாக நாட்டின் பொருளாதார முகாமையைப் பொறுத்த வரை, குறித்து நிற்கவில்லை. பொருளாதாரமானது பழைய ஒழுங்கு முறையிலேயே தொடர்ந்திருக்கத் தலைப்பட்டது. ஒரு நுண் நிலை மட்டத்திற் பிரித்தானியர் வசமிருந்த பெருந்தோட்டங்கள் பல இலங்கையர் வசம் கைமாறிய போதும் பரு நிலை மட்டத்தில் இலங்கையிலிருந்து பிரித்தானியர் பெற்றுக் கொண்ட நன்மைகளில் அது எதுவித குறைவையும் ஏற்படுத்தவில்லை. புதிய உடைமையாளர் பழையவர்களிடமிருந்து வர்க்க அடிப்படையில் வேறுபட்டிராதது மட்டுமன்றித் தமது (முதல் விளைவுப்) பொருட்களை விற்பனை செய்வதற்கும் பிரித்தானிய சந்தைகளையே தொடர்ந்தும் நம்பியிருக்க வேண்டியதாயிருந்தது. எனினும் அடிப்படை நிலையில் மாறுபாடுகளெதுவும் நிகழாத இத்தன்மை இலங்கை பெற்றுக் கொண்ட சுதந்திரத்தின் தன்மையைப் பாரதூரமாகப் பாதிக்கக் கூடிய தொன்றாயிருந்தது.

ஒரு நாடு சுதந்திரமடைவதென்பது வெளிப்படையான ஓர் அரசியல் நிகழ்வாக இருந்தாலும், அது அரசியலைப் பொறுத்தவரை மாத்திரமன்றி அக்குறிப்பிட்ட நாட்டின் சமூக – பொருளியல் வளர்ச்சியிலும் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சம்பவமாகும். சுதந்திரத்தின் மூலம் அரசியல் ரீதியாக நாடு தனித்தியங்கக் கூடியதாயிருப்பதுடன் அதன் பொருளாதார அமைப்பு, சமூக அம்சங்களாகிய மொழி, மதம், கலாச்சாரம் என்பவற்றையும் சுயமாக வளர்த்துச் செல்லக் கூடிய வாய்ப்பும் அதற்குக் கிட்டுகின்றது. ஆகவே எல்லா வகைகளிலும் நாடொன்றின் சுதந்திரம் அதன் அரசியல் வரலாற்றிலும் சமூகப் பொருளியல் வளர்ச்சியிலும் ஒரு திருப்பு முனையாக இயங்க வேண்டியதொன்றாகும். இலங்கை அதற்கு எந்த வகையிலும் ஒரு புறநடையல்லவெனப் பொதுவாகக் கூற முடிந்தாலும், இலங்கையின் விடயத்தில் அதன் சுதந்திரம் மேலும் தனிச் சிறப்பு வாய்ந்ததொன்றாக விளங்கியிருக்க வேண்டுமென்பதைச் சுட்டிக் காட்ட வேண்டியது அவசியமானது. ஏனெனில் இலங்கை 1505 ஆம் ஆண்டு முதலாக ஏறக்குறைய நாலரை நூற்றாண்டுகள் வரை வேறுபட்ட ஐரோப்பிய வல்லரசுகளின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்த பின், 1948ஆம் ஆண்டு, தனது சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளுகின்றது. அத்துணை நீண்டதொரு சகாப்தத்தில் ஒன்றிலிருந்து மற்றது பெரிதும் மாறுபடுகின்ற வல்லரசுகள் நாட்டின் பெரும் பகுதியை ஆட்சி புரிந்ததால் அதன் அரசியல் நிலை, பொருளாதார அமைப்பு, சமூக வளர்ச்சி என்ற யாவுமே ஒரு திரிபுபட்ட பின்னணியைக் கொண்டதாக மாற்றமடைந்திருக்குமென எதிர்பார்க்கலாம். அத்திரிபு நிலையிலிருந்து நாட்டைப் படிப்படியாக விடுவித்து அதனைச் சுயமான அபிவிருத்திப் பாதை நோக்கித் திருப்பி விடுவதன்

மூலம் தான் சுதந்திரமானது உண்மையான அர்த்தம் பெறக் கூடியதாயிருந்தது. சுருக்கமாகக் கூறின், சுதந்திரம் என்பது எல்லா வகையிலும் ஒரு பிரிநிலைக் கோடாக இயங்கியிருக்க வேண்டும்.

எனினும் இலங்கையின் சுதந்திரத்தைப் பொறுத்த முக்கியத்துவம் யாதெனில், அது நாம் எதிர்பார்ப்பது போல ஒரு பிரிநிலைக் கோடாக எந்த வகையிலும் செயற்படவில்லையென்பதேயாகும். அவ்வாறான பிரிநிலைக் கோடாகச் சுதந்திரம் விளங்க வேண்டுமாயின், அது நாட்டு மக்கள் அனைவரினதும் உணர்வுடன் ஒன்றிய வகையில் அவர்கள் எல்லோரும் ஒரு குறிப்பிட்ட லட்சியத்துடன் போராடிப் பெற்றுக் கொண்டதொன்றாயிருக்க வேண்டும். அவ்வாறான ஈடுபாடு ஏற்பட்டால் மட்டுமே சுதந்திரத்தை மக்கள் அநுபவிப்பதற்கும், அதன் நடைமுறை வெளிப்பாடாக, அரசியல் நிலைக்கப்பாற் பொருளாதார, சமூக, கலாச்சார நிலைகளிற் புத்துணர்வு பிறப்பதற்கும் வாய்ப்பேற்படும். ஆனால் இலங்கை பெற்றுக்கொண்ட சுதந்திரத்தின் தன்மை யாது? எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அதற்கு விடை பகர்கின்றார்: [63]

> '(சுதந்திரமானது) வரையறுக்கப்பட்ட தத்துவத்தின்பாற்பட்ட கொள்கைகளுக்கும் திட்டங்களுக்குமான போராட்டத்தின் பின் வரவில்லை. ஆனால் அது உண்மையில் சாதாரண நிகழ்வுகளின் போக்கிலேயே வந்திருந்தது. ........... சுதந்திரமின்றி நடைமுறைப் படுத்த முடியாத தத்துவங்கள், கொள்கைகள், திட்டங்கள் என்பவற்றை ஈடுபடுத்தி அவற்றிற்காகச் சுதந்திரத்திற்குப் போராடுவதென்பது இருக்கவில்லை...........அது ஓர் இரவுக்குள் கிடைத்திருந்தது. ஒரு நாள் நாங்கள் கண் விழித்தபோது ''நீவிர் இப்போது ஒரு டொமினியன்'' என எமக்குக் கூறப்பட்டது.'

ஆகவே சுதந்திரம் சாதாரண நிகழ்வுகளின் போக்கில் ஏற்பட்டதொன்றாயிருந்ததுடன் நாட்டு மக்கள் தம்மை அதனுடன் ஈடுபடுத்த முடியாத ஒரு 'திடீர்' சுதந்திரமாக அது விளங்கியதென்பதைப் பண்டாரநாயக்கா முன்வைக்கிறார். இலங்கையின் உயர் வர்க்கத்தினர் பிரித்தானியருடன் முதலாளித்துவ ரீதியாகக் கொண்ட இணக்கத்தின் விளைவாகவே அது ஏற்பட்டிருந்தது. அத்தகைய சுதந்திரத்தினால் அரசியல் அதிகாரம் உள்நாட்டு உயர் வர்க்கத்தினரைச் சென்றடைந்திருந்த போதும் அதனால் பெரும்பான்மையான நாட்டு மக்களுக்கு அவர்கள் உய்த்துணரக் கூடிய நன்மையெதுவும் கிடைத்திருக்கவில்லை. அதே நேரத்தில் ஆங்கில முதலாளிகளுக்கும் பொருளாதார ரீதியாக அதிக இழப்பு ஏற்பட்டிருக்கவில்லை. மறு புறம், அரசியல் ரீதியாகக் கூடத், தமக்கு ஏற்படக் கூடிய இழப்பைப் பிரித்தானியர் பெரிதும் குறைத்துக் கொண்டிருந்தனரென்றே கூற வேண்டும். சுதந்திரத்தின் வழி அதிக அரசியல் நட்டம் ஏற்படாமற் பாதுகாத்துக் கொள்வதில் இரு அம்சங்கள் பிரித்தானியருக்கு உரிய உத்தரவாதமளித்திருந்தன எனலாம். அவற்றுள் ஒன்று இலங்கை சுதந்திரமடைந்த போது ஏற்றுக் கொண்ட அரசியல் திட்டம், மற்றது சுதந்திரத்தின் ஒரு பகுதியாக இலங்கை பிரித்தானியாவுடன் கைச்சாத்திட்டுக் கொண்ட வெளிநாட்டுக் கொள்கை தொடர்பான இரு ஒப்பந்தங்கள்.

நாடொன்று சுதந்திரத்தை எதிர்நோக்கும் போது ஏனைய துறைகளிலான மாற்றங்கள் ஒரு தாமதித்த நிலையில் ஆரம்பிக்க முடிந்தாலும், குறைந்த பட்சம் அரசியல் ரீதியாக ஆவது, அது ஓர் உடனடி மாற்றத்தைக் குறித்து நிற்க வேண்டும். அந்த மாற்றத்தின் சின்னமாகப் புதிய அரசியல் திட்டமொன்று வரையப்பட்டு அதன் கீழ் நாட்டின் நிர்வாகம் ஒழுங்குபடுத்தப்படுவது அத்தியாவசியமானதாயிருந்தது. ஆனால் அவ்வாறான புதிய அரசியல் திட்டமொன்று இலங்கையின் சுதந்திரத்துடன் அமுலுக்கு வந்திருக்கவில்லை. 1944ஆம் ஆண்டு மந்திரிகள் சமர்ப்பித்த நகல் திட்டத்துக்கமைய வரையப்பட்டு 1946ஆம் ஆண்டு முதல் ஏற்கெனவே அமுலாக்கப்பட்டிருந்த சோல்பரி அரசியல் திட்டமே 1948 ஆம் ஆண்டு சுதந்திர இலங்கையின் அரசியல் திட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன் தன்மையை ஹோவார்டு றிகின்ஸ் (W. Howard Wriggins) எடுத்துக் கூறுகின்றார்:[64]

> '1948 ஆம் ஆண்டின் ''புதிய'' அரசியல் திட்டம் எந்த வகையிலும் புதியதாயிருக்கவில்லை. ஏற்கெனவே இருந்தவற்றுடன், அடிப்படைத் தன்மை வாய்ந்தவையாயிருந்தாலும், குறிப்பிட்ட விடயங்கள் பற்றிய ஒரு சில பதிலீடுகளும், விசேட உடன்படிக்கைகளும் மாத்திரமே கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தன. சுதந்திரமானது கடந்த காலத்திலிருந்து விடுபடும் தீவிரமான ஒரு முறிவைக் குறித்து நிற்பதற்குப் பதிலாகப் பூரண பிரதிநிதித்துவம், பொறுப்புணர்வு என்பவற்றைக் கைக்கொள்ளும் அரசாங்கம் நோக்கிய முடிவுக் கட்டமொன்றினையே பிரதிநிதித்துவப்படுத்தியது.'

சோல்பரி அரசியல் திட்டத்தின் முக்கியமான தன்மை யாதெனில் அதன் தீர்மானம் எடுக்கும் செய்முறை அசைவுத் தன்மை குறைந்ததொன்றாயிருந்தமை ஆகும்.[65] அதன் கீழான பாராளுமன்ற நிர்வாக சபை மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்திற்கு மாத்திரமன்றி மேற் சபையொன்றிற்கும் பொறுப்புடையதாயிருந்தது. அத்துடன் பிரித்தானிய முடியின் பிரதிநிதியாகிய மகா தேசாதிபதியும் நிர்வாக சபையின் தீர்மானங்களை அங்கீகரிக்க வேண்டியதாயிருந்தது. இத்தனை படிகளையும் கடந்து சட்டம் ஆக்கப்பட்ட பின்பு அதற்கு விளக்கம் அளிக்கும் பொறுப்பு உயர் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டு ஈற்றில் அது பிரித்தானிய பிரிவி கவுன்சில் வரை செல்லக் கூடியதாயிருந்தது. ஆகவே சட்டங்களின் இறுதி அங்கீகாரம் பிரித்தானியா வசம் தொடர்ந்திருப்பதற்கு வகை செய்யப்பட்டிருந்தது. ஆனால் அதற்கு முந்திய படியிலிருந்த மேற் சபையானது சலுகை பெற்ற உயர் வர்க்கத்தினரின் உறைவிடமாகவே விளங்கியிருந்தது. எனவே, பிரித்தானிய ஆட்சியாளருடன் இணக்க உடன்பாடு கொண்ட அதன் அங்கத்தவர் பிரித்தானிய நலவுரிமைகளுக்குப் பாதகமான எந்த ஒரு சட்டத்தையோ தீர்மானத்தையோ தடுத்து அல்லது ஆகக் குறைந்தது தாமதித்து வைக்கக் கூடிய சக்தி பெற்றவர்களாயிருந்தனர். சோல்பரி அரசியல் திட்ட நடைமுறைகளை முற்றாக நோக்கின், அவை இலங்கையின் சுதந்திரத்தின் மூலம் பிரித்தானியா உடனடியாகப் பாதிப்படையாது பாதுகாக்கக் கூடிய பல்வேறு ஒழுங்குகளையும் கொண்டிருந்தன. ஆனால் அதே நேரத்தில் அவை 'குறைவிருத்திச் சமூகமொன்றை நவீன தேசிய

அரசாக விரைவாக உருமாற்ற விழையும் நீண்ட கால நோக்குடைய கொள்கை வகுப்போரை விரக்தியடையச் செய்யக் கூடியவையாயிருந்தன.'[66] ஆனால் பிரித்தானியருடன் இணைந்திருந்த உயர் வர்க்கத்தினர் ஆட்சி பீடத்திலிருந்த வரை இந்த விரக்தி நிலை உணரப்படவில்லை.

இலங்கை சுதந்திரம் பெறுவதுடன் இணைந்த வகையில், சுதந்திரத்தின் ஒரு பகுதியாகவே 1948 பிப்ரவரி மாதத்தில் பிரித்தானியாவுடன் இலங்கை கைச்சாத்திட்டுக் கொண்ட இரு உடன்படிக்கைகள் அமுலுக்கு வந்திருந்தன.[67] அவற்றுள் முதலாவது ஒரு பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தமாகும். அதன்படி இலங்கையின் எல்லைகளைப் பிற நாடுகளின் ஆக்கிரமிப்பினின்றும் பாதுகாப்பதற்குரிய இராணுவ உதவியைப் பிரித்தானியா வழங்க வேண்டுமென எடுத்துக் கூறப்பட்டது. தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்வதற்கான தகைமை, திறமை என்பன இலங்கைப் படைகளுக்கு இல்லாத காரணத்தினால் இது அவசியமானதெனச் சுட்டிக் காட்டப்பட்டது. அதற்கு ஈடாக, இலங்கை உள்நாட்டிலிருந்த கடற் படை, விமானத் தளங்களையும், துறைமுகங்கள், மற்றும் இராணுவ நிறுவனங்கள், தொலைத் தொடர்பு வசதிகள் என்பவற்றையும் பிரித்தானியா தொடர்ந்தும் பயன்படுத்துவதற்குச் சம்மதித்தது. இது தவிரப் பாதுகாப்புத் தேவைகள் கருதி இரு அரசாங்கங்களும் இணைந்து சில விடயங்களை நிர்ணயித்துக் கொள்வதற்கும், நிர்வாக ஒழுங்குகள் சிலவற்றை மேற்கொள்வதற்கும் இடமளிக்கப்பட்டிருந்தது. இரண்டாவது ஒப்பந்தம், முதலாவதன் அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததொன்றுயிராவிட்டாலும், அதுவும் இலங்கை பிரித்தானியாவின் மீது தங்கியிருக்கும் பான்மையை வளர்ப்பதாகவே இருந்தது. பொதுநலவாய அமைப்பின் அடிப்படைத் தன்மைகளுள் ஒன்றாகிய ஆலோசனை பெறும் தகுதியை இந்த ஒப்பந்தம் இலங்கைக்கு வழங்குவதாயிருந்தது. அதன்படி வெளிநாட்டுக் கொள்கை விடயத்தில் இன்னொரு தனிப்பட்ட அங்கத்தவர் பாதிக்கப்படும் படியான நடவடிக்கை எதனையும் இலங்கை மேற்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்படுமாயின் அதற்கு முன்னதாகப் பொதுநல அமைப்பின் பரஸ்பர ஆலோசனையை அது பெற்றுக் கொள்ள வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டது. அத்துடன் இலங்கை தனது சொந்தத் தூதரகங்களை நிறுவிக் கொள்வது சாத்தியப்படாத நாடுகளில் அதனைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குப் பிரித்தானியா சம்மதித்தது.

இந்த இரு உடன்படிக்கைகளும், நெகிழ்ச்சியற்ற சோல்பரி அரசியல் திட்டத்துடன் இணைந்த வகையில், பிரித்தானியரின் அரசியல் முன்னுரிமைகள் இலங்கையின் சுதந்திரத்தாற் பாதிக்கப்படாதெனபதைச் சந்தேகத்துக்கிடமின்றி உத்தரவாதப்படுத்தியிருந்தன. ஆனால் அதே நேரத்தில், நாடொன்றின் வெளிநாட்டுக் கொள்கை கூட ஆட்சியாளர் குழாமின் வர்க்க ஈடுபாட்டிற்கேற்பவே நிர்ணயிக்கப்படுமென்பதையும் அவை எடுத்தியம்புவனவாயிருந்தன.[68] 1956 ஆம் ஆண்டு வரை இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை பிரித்தானியாவுக்கும் அதனைச் சார்ந்த ஏனைய முதலாளித்துவ வல்லரசுகளுக்கும் சார்பானதொன்றாகவே பின்பற்றப்பட்டமையைக் கண்டு கொள்ளலாம். அத்தகைய போக்கிற்குரிய ஒரு முன்னோடியாகவே இந்த இரு ஒப்பந்தங்களும் அமைந்திருந்தன. நாட்டின் சுதந்திரத்துடன் ஒன்றிணைய வேண்டிய அடிப்படையான பொருளாதார,

சமூக மாற்றங்களை அவை மேலும் தடுத்து வைப்பனவாயிருந்தன. ஏனெனில் முதலாளித்துவ வல்லரசுகளுக்கு வாய்ப்பான வெளிநாட்டுக் கொள்கையொன்று பின்பற்றப்படும் வரை, உள்நாட்டிலும் சுயமாக இயங்கக் கூடிய வலிமையை நாடு இழந்திருந்ததென்றே கொள்ள வேண்டும். உள்நாட்டில் அரசாங்கம் செயற்படுத்த விரும்பும் திட்டங்களை, அவை முதலாளித்துவ வல்லரசுகளுக்கு ஏற்புடையதாக இருக்கும் வரை தான், தடையின்றி அமுல் நடாத்தக் கூடியதாயிருக்கும். அவ்வாறில்லாத நிலைகளில் அவற்றைக் கைவிடும்படி அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்படலாம் அல்லது வெளி நாட்டிலிருந்து உருவாகக் கூடிய பல தடைகளுக்கு அது முகம் கொடுக்க வேண்டியதாயிருக்கலாம்.

ஆகவே தொகுத்து நோக்கின் இலங்கை முயற்சியாளர் பிரித்தானியருடன் கொண்ட முதலாளித்துவ இணக்கம் பொருளாதாரத்துடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதொன்றாயிராது நாட்டின் சமூக அரசியல் வளர்ச்சிகளையும் வெகுவாகப் பாதிப்பதொன்றாயிருந்தது. அதனுடைய பிரதான விளைவாக நாம் மேலே எடுத்துக் காட்டியிருப்பது போல நாட்டின் சுதந்திரம் என்பது, பல வகைகளிலும் அர்த்தமற்றதொன்றாக ஆக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இலங்கையின் சுதந்திரம் 'பொதுநலவாய பிரதம மந்திரிகள் மகாநாட்டுக்கான லண்டன் விஜயங்களையும், ஐக்கிய நாடுகள் சபையில் வாக்குரிமை என்பதையும் தவிர............எதனைக் கருதியது?' என ஹியூ ரிங்கர் (Hugh Tinker), வினவெழுப்புவது[69] பெரிதும் நியாயமுடையதொன்றாகவே படுகின்றது. இலங்கை ஆட்சியாளர் தம்முடன் கொண்டிருந்த இணக்கத்தைப் பிரித்தானியா எவ்வளவு தூரம் மதித்ததென்பதற்கு, 1956 வரை இலங்கை 'ஒரு மாதிரிக் குடியேற்ற நாடு' என அதனால் வர்ணிக்கப்பட்டமை[70] தவிர வேறு எவ்வகைச் சான்றும் அவசியமில்லையெனலாம். எனினும் இலங்கை முயற்சியாளரின் முதலாளித்துவ இணக்கமும் அதன் மூலம் உண்டான பொருளாதார, சமூக, அரசியல் விளைவுகளும் 1956 வரை மாத்திரமன்றி இலங்கையின் 1956க்குப் பிந்திய நீண்ட கால அபிவிருத்தி மீது கூட பலத்த தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடியனவாயிருந்தன. அது பற்றிய விபரங்கள் தனி ஓர் ஆய்வுக்குரியவையாகும்.

## குறிப்புகள்

1. S.B.D. de Silva (1982) : 1–2.

2. Karl Marx (1976) : 915.

3. இவ்விபரங்களடங்கிய பூரணமான ஓர் ஆய்வுக்கு, Andre Gunder Frank (1978).

4. அதனிடையே வல்லரசுகளிடம், குறிப்பாகப் பிரித்தானியாவிடமிருந்த, குடியேற்ற நாடுகளின் தன்மையிலும் குறிப்பிடத்தக்க ஒரு மாற்றம் ஏற்பட்டிருந்தமை கவனிக்கத் தக்கது. மித மண்டலக் குடியேற்றங்களாகிய வடக்குப் புறக் குடியேற்றங்களும், ஐரோப்பியர் நிரந்தரமாகக் குடியேறிய குடியேற்றங்களும் தமது சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள, அயன மண்டலப் பிரதேசங்களிலான, ஐரோப்பியர் நிரந்தரமாகக் குடியேறாத குடியேற்றங்களே இப்போது வல்லரசுகளின் குடியேற்றங்களாக மாறியிருந்தன. இப்புதிய குடியேற்றங்களின் விளைபொருட்கள் பலவும் மித மண்டலத்திலிருந்த வல்லரசுகளில் எவ்விதத்திலும் பெற்றுக் கொள்ள முடியாதவையாயிருந்தன. எனவே அவை வல்லரசுகளுக்கு ஒரு வகையில் அத்தியாவசியமான பண்டங்களாகவுமிருந்தன. ஐரோப்பியர் (நிரந்தரமாகக்) 'குடியேறிய' குடியேற்றங்களுக்கும் 'குடியேறாத' குடியேற்றங்களுக்குமிடையிலான வேறுபாடுகள் பற்றிய சிறந்த ஓர் ஆய்வுக்கு, S. B. D. de Silva (1982) : 51–134.

5. V. I. Lenin (1960).

6. G. A. Kozlov (ed) (1977) : 339 – 340.

7. V. I. Lenin (1960) : 761.

8. தங்கியிருத்தற் கோட்பாடுகளின் வளர்ச்சி 1950கள் முதலே ஆரம்பித்திருந்தாலும் 1960 களின் இறுதியிலும் 1970 களின் ஆரம்பத்திலும் குன்டார் பிராங் மேற்கொண்ட முயற்சிகளின் வழியாகவே அது உச்ச நிலையை அடைந்தது.
Andre Gunder Frank (1967).
Andre Gunder Frank (1969).

9. தங்கியிருத்தற் கோட்பாட்டின் தோற்றம், வளர்ச்சி மற்றும் அதற்கெதிரான கண்டனங்கள் போன்ற விபரங்களுக்கு, Ronaldo Munck (1984) : 7–15.

10. T. Dos Santos (1973): 76.

11. குறைவிருத்தி நாடுகளின் வர்க்க வளர்ச்சி தொடர்பான சிறந்த ஒரு விளக்கத்திற்கு, Ronaldo Munck (1984) : 81 – 109.

12. Ibid : 88.

13. விபரங்களுக்கு, Bipan Chandra (1979) : 144 – 170.

14. Ibid : 148.

15. Ibid: 146.

16. Ibid: 148.

17. Ibid: 331.

18. லத்தீன் அமெரிக்க நாடுகளைப் பொதுவாக எடுத்து நோக்குமிடத்துச் சுதேசிய கைத்தொழில் பூர்ஷீவா வர்க்கமானது, பல சந்தர்ப்பங்களில், நிலச் சுவான்கள் வர்க்கத்துடன் ஒன்று சேர்ந்ததொன்ருகக் காணப் பட்டது. அதன் காரணமாக அது அபிவிருத்திச் செய்முறையில் தனது முன்னணி நிலையினை வலியுறுத்த முற்படவில்லையென்ற குற்றச்சாட் டுக்கும் உள்ளாகின்றது. விபரங்களுக்கு, Ronaldo Munck (1984) : 88 – 89.

19. அவ்வாறு முன்னணியில் திகழ்ந்த உயர் குடும்பங்கள் பற்றிய விபரங் களுக்கு, Michael Roberts (1972b) : 276 – 277.

20. ஏ. சீ. எல். அமீர் அலி (1972) : 1.

21. Ibid.

22. Michael Roberts (1972) : Table I : 97.

23. Ibid : 98.

24. Michael Roberts (1972b) : 277.

25. Ibid : 268.

26. Ibid : 269.

27. Ibid : 266.

28. Ibid : 267.

29. D. R. Snodgrass (1966) : Table A – 37.
இப்பரப்பளவு பெருந்தோட்ட முறையிலமைந்த செய்கையுடன் சிற்றுடைமைகளையும் உள்ளடக்கினலும் பின்னையவை எந்த வகையி லும் பெருந்தோட்டங்களுக்குப் போட்டியாக அமைய முடியவில்லை.

30. Sessional paper XXII – 1934 (Dec. 1934) : 170.

31. V. Nithiyanandan: (1975) 362 – 363.

32. Ibid : 364.

33. 20 ஆம் நூற்றுண்டின் ஆரம்ப வருடங்களில் றப்பர்ச் செய்கைக்கென இலங்கையில் மிதக்க விடப்பட்ட கூட்டுப் பங்கு நிறுவனங்கள் பல முறிவடைந்தமையும் அவற்றில் இலங்கையர் கொள்ளக் கூடிய நம்பிக்கையை ஓரளவுக்குச் சிதறடித்திருந்தது. Ibid : 365.

34. Sessional paper XXII – 1934 (1934 Dec.) : 161.

35. S. Rajaratnam (1962 April) : 102.

36. Ibid : 109.

37. Richard T. Stillson (1971 Nov.) : 592.

38. நெற் செய்கை மரபு ரீதியான ஒரு துறையாயிருந்தது மாத்திரமன்றி அரசாங்கத்திடமிருந்து புதிதாகப் பெற்ற காணிகளும் நெற் செய்கைக்குட்படுத்தப்பட்டிருந்தன. அவ்வகையில் முடிக்குரிய காணிகளைப் பெறுவதில் இலங்கையரும் முன்னணி வகித்தமையும் அவர்கள் பெற்றுக் கொண்ட காணிகள் 1—10 ஏக்கர் வரை பரப்புடையவையாயிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அது தவிர, தனியார் நிலங்களுக்கான சந்தையிலும் நெல் பயிரிடு நிலங்கள் ஒரு பிரதான இடத்தைப் பிடித்திருந்தன.
விபரங்களுக்கு, Michael Roberts (1972 a) : 149.

39. V. Nithiyanandan (1975) : 149.

40. N. Ramachandran (1963) : 149.

41. Sessional Paper XXII – 1934 (1934 Dec.) : 192.

42. Michael Roberts (1972b) : 271.

43. Ibid : 270.

44. Swarna Jayaweera (1979) : 133.

45. Michael Roberts (1972b) : 271.

46. Swarna Jayaweera (1972) : 467.

47. Ibid.

48. Michael Roberts (1972b) : 272.

49. Ibid : 271.

50. Ibid : 273 – 274.

51. இந்நிலையை இந்தியாவுடன் ஒப்பிடுவோமாயின் அங்கு 1857 ஆம் ஆண்டிலேயே மூன்று பல்கலைக்கழகங்கள் திறக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

52. Michael Roberts (1978) : 179.

53. இது தொடர்பான விபரங்கள் பலவற்றையும் உள்ளடக்கிய பெருந்தோட்ட ஊழியம் பற்றிய ஆய்வுக்கு, S. B. D. de Silva (1982) : 204 – 273.

54. நகரத் தொழிலாளர் வர்க்கத்தின் அமைப்புப் பற்றிய விபரங்களுக்கு Visakha Kumari Jayawardena (1972) : 5 – 12.

55. Ibid : 6.

56. Ibid.

57. Ibid.

58. Ibid.

59. Ibid : 7.

60. இது தொடர்பாக டீ. எஸ். சேனநாயக்கா கொண்டிருந்த கொள்கைகள் அவற்றின் செயற்பாடு பற்றிய விபரங்களுக்கு, K. M. de Silva (1982): 78 – 84.

61. 1833 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இலங்கையின் முதலாவது சட்டசபை உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவரின் ஆலோசனைகளைக் கருத்திலெடுத்துக் கொள்வதொன்றுயிருந்தது 1912, 1920, 1923 ஆகிய ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் திட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையை வழங்கியிருந்ததுடன் சட்டவாக்க நடவடிக்கைகளிற் படிப்படியாகக் கூடியளவு பொறுப்பினையும் இலங்கையருக்கு வழங்கியிருந்தன. 1931 ஆம் ஆண்டின் டொனமூர் அரசியல் திட்டம் சர்வசன வாக்குரிமை, பிரதேசப் பிரதிநிதித்துவம் போன்ற புரட்சிகர அம்சங்கள் சிலவற்றை அறிமுகப்படுத்தி அரைகுறைப் பொறுப்பாட்சியை வழங்குவதற்குக் காலாயிருந்தது. 1946இல் அமுலுக்கு வந்த சோல்பரி அரசியல் திட்டம் மேற்குறித்தவற்றுடன் மந்திரி சபை ஆட்சி முறையையும் புகுத்தியிருந்தது. இந்த அரசியல் திட்டமே 1948 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டு இலங்கை பூரண சுதந்திரத்தை அனுபவிப்பதற்கான திட்டமாக அங்கீகரிக்கப்பட்டது.

62. விபரங்களுக்கு, K. M. de Silva (1982) : 82–85.

63. மேற்கோள் E. F. C. Ludowyck (1966) : 204.

64. W. Howard Wriggins (1960) : 93.

65. Radhika Coomaraswamy (1984) : 10.

66. Ibid : 10 - 11.

67. விபரங்களுக்கு, W. Howard Wriggins (1960) : 384-385.

68. விபரங்களுக்கு, S. Lenka & S. Pattanaik (August 1979) ; 48-57.

69. Hugh Tinker (1982) : 19.

70. K. M. de Silva (1982) : 85.

## உசாவியவை


*அமீர் அலி, ஏ. சீ. எல். (1972 ஜனவரி – ஜூலை) 'இலங்கையின் 19 ஆம் நூற்றுண்டுப் பொருளாதார வளர்ச்சியிற் சிறுபயிர்க் கோப்பிச் செய்கையின் வரலாறும் பங்கும்', சிந்தனை, மலர் 5, இதழ் 1, 2, பக்கம் 1 - 13.*

Chandra, Bipan (1979), **Nationalism and Colonialism in Modern India**, Orient Longman, New Delhi.

Coomaraswamy, Radhika (1984), **Sri Lanka: The Crisis of the Anglo - American Constitutional Traditions in a Developing Society**, Vikas Publishing House Pvt. Ltd. New Delhi.

de Silva, K. M. (1982), '"The Model Colony" : Reflections on the Transfer of power in Sri Lanka', in Wilson, A. Jeyeratnam and Dalton, Dennis (ed) **The States of South Asia : Problems of National Integration**, C. Hurst & Company, London, pp. 77-88.

de Silva, S. B. D. (1982), **The Political Economy of Under-development**, Routledge & Kegan, paul Ltd., London.

Frank, Andre Gunder (1967), **Capitalism and Underdevelopment in Latin America**, Monthly Review Press, New York.

......(1969), **Latin America : Underdevelopment or Revolution**, Monthly Review press, New york.

......(1978), **World Accumulation 1492 - 1789**, Macmillan Press Ltd., London.

Jayawardena, Visakha Kumari (1972), **The Rise of the Labor Movement in Ceylon**, Duke University Press Durham, North Carolina.

Jayaweera, Swarna (1972), 'Education Policy in the Early Twentieth Century' in de Silva, K. M. (ed), **University of Ceylon, History of Ceylon**, University of Ceylon Press Board Colombo, pp. 461 – 475.

……(1979) 'Education' in Fernando, Tissa & Kearney Robert, N. (ed), **Modern Sri Lanka : A Society in Transition**, Maxwell School of Citizenship and Public Affairs, Syracuse Univer sity, New York, pp. 131– 154.

Kozlov, G. A. (ed) (1977), **Political Economy : Capitalism**. Progress Publishers, Moscow.

Lenin, V. I. (1960), 'Imperialism, the Highest Stage of Capitalism' in **Selected Works**, Vol. I, Foreign Languages Publishing House, Moscow, pp. 711 – 815.

Lenka, S. and Pattanaik,S (1979 August), 'Sri Lanka's Foreign Policy : A Class Analysis', **Social Scientist**, Vol. 8, No. 1 (Whole No. 85) pp. 48 – 57.

Ludowyck, E. F. C. (1966), **The Modern History of Ceylon**. Weidenfeld & Nicholson, London.

Marx, Karl (1976), **Capital**, (Vol. 1) Penguin Books Ltd., Harmondsworth.

Munck, Ronaldo (1984), **Politics and Dependency in the Third World: The Case of Latin America**, Zed Press Ltd. , London

Nithiyanandan, V. (1975), **The Development and Impact of the Primary Commodity sector in Ceylon 1920 – 1950, With special Reference to International Marketing Agreements**, Ph. D. Thesis (Unpublished) University of Reading.

Rajaratnam, S. (1962 April) 'Plantation Rubber Industry in Ceylon' **University of Ceylon Review**, Vol. XX, No. 1, pp. 96 – 124.

Ramachandran, N. (1963), **Foreign Plantation Investment in Ceylon 1889 - 1958**, Central Bank of Ceylon, Colombo.

Roberts, Michael (1972) 'Export Agriculture in the Nineteenth Century', in de Silva, K. M. (ed), **University of Ceylon**

**History of Ceylon**, University of Ceylon Press Board, Colombo, pp.89–106.

......(1972a) 'Aspects of Ceylon Agrarian Economy in the Nineteenth Century', in de Silva, K. M. (ed), **Ibid.**, pp. 146–164.

......(1972b) 'Elite Formation and Elites 1832 – 1931', in de Silva, K. M. (ed), **Ibid.**, **pp.** 263-284.

......(1978) 'Reformism, Nationalism and Protest in British Ceylon: The Roots and Ingredients of Leadership', in Robb, Peter & Taylor, David (ed), **Rule, Protest, Identity: Aspects of Modern South Asia**, Curzon Press, London, pp. 159-192.

Santos, T. Dos (1973) 'The Crisis of Development Theory and the Problem of Dependence in Latin America', in Bernstein Henry (ed), **Underdevelopment and Development**, Penguin Books Ltd., Harmondsworth, pp. 57-80.

Sessional Paper XXII – 1934 (1934 Dec.) **Report of the Ceylon Banking Commission**, Government Press, Colombo.

Snodgrass, Donald R. (1966) **Ceylon: An Export Economy in Transition**, Richard D. Irwin Inc., Illinois.

Stillson, Richard T. (1971 Nov.) 'The Financing of Malayan Rubber 1905–1923', **Economic History Review** (Second Series) Vol. XXIV, No. 4, pp. 589–598.

Tinker, Hugh (1982) 'South Asia at Independence: India, Pakistan and Sri Lanka', in Wilson, A. Jeyaratnam & Dalton, Dennis (ed), **The States of South Asia: Problems of National Integration**, C. Hurst & Company, London, pp. 1–25.

Wriggins, W. Howard (1960) **Ceylon; Dilemmas of a New Nation**, Princeton University Press, Princeton, New Jersey.